
www.padippakam.com

# ககம்

KAKAM



"எதிர்ப்பனிப்புயலிடை
வீழ்ந்தனமல்லோம்,
திறங்களை வீசியெறிந்து
மீண்டுவரு[illegible]
நாம்
புற்களும், பூக்களும்"

......................................................முல்லையூரான்

Siva. 22.6.96

③ MARTS 96

படிப்பகம்

www.padippakam.com

## சுடலைப் பூ !

சன்னதுமாரி

என் அன்பே !
நீ உயிருடனிருக்கிறாயா ?
– இவ்விதமானவர்களை . . .
– இந்த வாழ்க்கையை . . .
– இந்தத் தேன்கூட்டு உலகத்தை . . .
பூக்களிடம் தேன்திருடி
பூமியை மொய்த்திருக்கும் மனிதக் குளவிகளை
நிஜமென்று நம்பி . . .

மறுபடியும் கேட்கிறேன் . . ?

என் அன்பே !
நீ உயிருடனிருக்கிறாயா ?
ஒவ்வொரு வாய்க்குள்ளும் தொங்கும்
முப்பத்தியிரண்டு கத்திகள் !
– இந்தச் சிரிப்புகள் . . .
– இந்தப் போற்றல்கள் . . .
– இந்தத் தூற்றல்கள் . . .
– இந்தச் சுயநலங்கள் . . .
இவைகளும் நீயும் எப்படி . .



கடைசியாகக் கேட்கிறேன் . . ?

என் அன்பே !
நீ உயிருடனிருக்கிறாயா ?
– கொள்கைகள் . . .
– கோட்பாடுகள் . . .
– இஸங்கள் . . .
– மதங்கள் . . .
– குழுக்கள் . . .
இவைகளில் உன் இருத்தலெங்கே . . ?

என் அன்பே !
நீ உயிருடனிருக்கிறாயா ?
இருந்தால் :
ஏன் . . ?
உன் பூப்புக்கு
இந்தச்சுடலைச் செடிகளைமட்டுமே
தெரிவுசெய்தாய் . . ?



படிப்பகம்

www.padippakam.com

# காகம்

"முற்றமெல்லாம் புழுங்கல்- அதனால்

நம் நெஞ்சமெல்லாம் அம்முற்றம்."

- ஒரு தாய்



## பொருத்தமற்றவையா?

**1996 ம் ஆண்டின் காகத்தின் மாசிமாத இதழில் எரியும் பிரச்சனை என்கின்ற தலைப்பில் பாகிஸ்தானிய சமூகத்தினரிடையே இடம்பெற்றுவரும் வன்முறை, சமூகக்குழப்பங்களும், அவற்றிற்கான காரணகாரியங்கள் பற்றியும் ஒரு கட்டுரை பிரசுரிக்கப்பட்டது. அதுதொடர்பாக அன்றிருந்த சமூக அக்கறையாளர்களினது வேகம் இன்று வழமைபோலத் அப்பிரச்சனைதொடர்பாக எடுக்கப்பட்வேண்டிய அன்றேல் அவர்கள் வலியுறுத்திய கருமங்களிலிருந்து விலகி முற்றாக அதைக்கைவிட்ட நிலையில் இன்று அதே பாகிஸ்தானிய இரண்டாவது சமூகம் அதேபிரச்சனைகளோடு வாழ்ந்துவருகின்றது. இதுகவலைக்குரிய ஒன்றாகும்.**
**இன்று மேற்குலகநாடுகளில் அதுவும் பல்லின,நிறக் கலப்பு மக்கள்குழுவினரிடையே இப்பிரச்சனை வெப்பியாரமாக எரிகின்றது.**

ஒருபுறம் மேற்குலகநாடுகளில் சுதேசிய இன,நிற எழுச்சியும், மறுபுறம் அந்நாடுகளில் சிறுபான்மை இன,நிற மக்கள்குழுவினரும்,அதுவும் இளையசமுதாயத்தினரும் தமது உரிமைகளுக்காக தமது குரலை உயர்த்திவருகின்றனர். இந்நிலையில் இந்நாடுகளிலுள்ள சட்வாக்கங்கள், தற்போதைக்கு ஒரு சமரசத்திற்கு வருவதற்கு உதவுமேதவிர இப்பிரச்சனையின் முக்கிய வேர்களைக்களையும்படியாக அமையவில்லை.அதேநேரத்தில் இருசமூகத்தினருக்கிடையே தாமரையில் நீர்த்துளிபோல வடிவம்பெற்றிருக்கும் இணைவாக்கசெயல்முறைகளும் இன்னும் இன்னும் நெருக்கடிக்குள்ளாகி வருவதை நாம் துல்லியமாகக்காண்கின்றோம்.



படிப்பகம்

www.padippakam.com

இந்தநிலையில் நமது புலம்பெயர்சமூகத்தின் இரண்டாவது பரம்பரையினரும், இதேதிசையில் இதே பரிணாமங்களோடு வளர்ந்துவருகின்றனர்.
வீட்டுள் இந்த இளைஞர்களும்,யுவதிகளும் ஒருவகை மாயைத்தமிழ் வாழ்வு வாழ்ந்துவருவதுடன் அவர்களுக்காக விரிந்திருக்கும் புறச்சூழலானது அவர்களை தமிழற்றவாழ்வொன்றுக்கு தயார்செய்து வருகின்றது. அத்துடன் தமது பெற்றோரிலிருந்து பல துறைகளிலும் அகன்று,ஆழ்ந்து தமது சிந்தனையை விருத்திசெய்துவரும் இவர்கள் தாம் இன்று அனுபவித்துவரும் மாயைத்தமிழ் சூழலிலிருந்து விலகிவிடக்கூடிய நிலைகள் துல்லியமாகத்தெரிகின்றன. ஏலவே வருடங்களாலும்,தொகையாலும் வேறுபடும் இன்னொரு இனமக்களது அனுபவங்களை ஆசியப்பொதுச்சூழலிலிருந்து பார்ப்போமானால் நாளை எமது சந்ததிக்கும் இதேநிலை ஒன்று காத்திருப்பதாக காகம் கருதுகின்றது.
இதைத்தவிர்க்க நாம் என்ன செய்யலாம்.?
வழமைபோல இன்று நடைபெற்றுவரும் தமிழ்க்கலாச்சார விழாக்களையே தொடரப்போகின்றோமா? அல்லது மிகுவிரைவில் மூடப்படப்போகும் தாய்மொழிக்கல்விப் பாடசாலைகளுக்கு மாற்றுவழிகாணப்போகிறோமா? அல்லது புதிதுபுதிதாய் கோவில்களைக்கட்டி தெய்வங்களை புதியஇடங்களில் பிரதிஸ்டைசெய்யப்போகின்றோமா? அல்லது............இப்படிப்பல..........

காகத்தினுடைய கருதுகோள் என்னவென்றால்: இதுவரை இப்பராயத்தினருக்காக அவர்களது எதிர்கால நலனுக்காக ஆங்காங்கு எடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் சம்பந்தப்படும் பிரச்சனைக்கு பொருத்தமற்றவையா உள்ளன. அத்துடன் இதுதொடர்பாக மேலும் மேலும் தமிழ்ச்சங்கங்கள் கூடுவதைத்தவிர்த்தும், இப்பராயத்தினரின் நல்வாழ்வுக்காக பெற்றோர்களது கட்டுப்பாட்டிலுள்ள (இன்று) இவர்களை தகுந்தமுறையில் வாழ்க்கைக்கு தயார்ப்படுத்தவேண்டிய கடமைப்பாட்டினை ஒவ்வொரு பெற்றோரும் உணர்ந்து செயற்படவேண்டும் என்பதேயாகும்.

காலம் விரைவாகப்போய்க்கொண்டிருக்கிறது.
பிரச்சனைகள் அவர்களைநோக்கி பூதாகாரமாக வந்துகொண்டிருக்கின்றது.
இந்த முகத்தில் எழுதப்படுகின்ற விடையங்கள் விளக்கமற்றிருப்பின் 1996 மாசி மாத இதழில் வெளிவந்த எரியும் பிரச்சனை என்ற கட்டுரையைப் பார்த்தல்; இதைவிளங்கிக்கொள்ள உதவியாக இருக்கும்.

காகம்

## உள்ளே..........


| பக்கம் | விடையம் |
|---|---|
| 02 | கவிதை |
| 3 | முகம் |
| 05 | சரியாசனம் |
| 08 | மலர்தல் வாடல் தெரிதல் |
| 10 | வரலாற்றிற்கு ஒருகடிதம் |
| 14 | வழக்கு |
| 17 | பிள்ளைகளை அடிக்கலாமா? |
| 20 | ஒரு இளைய அனுபவம் |
| 22 | H.C.Andersen கதை |
| 25 | நகைச்சுவைகள் |
| 27 | கவிதைகள் |


ஞாபகப்படுத்துகின்றது ......... காகம்

1996 ம் ஆண்டிற்கான காகத்தின் சந்தாப்பணத்தை செலுத்தி காகத்தை தொடர்ச்சியாகபெற வசதிசெய்யுங்கள்.

இன்னமும் சிலர் 1995 ம் ஆண்டிற்கான சந்தாவை செலுத்தாதிருக்கின்றீர்கள் என்பதனையும் ஞாபகமூட்டி..........

காகம் மாசிகையை தொடர்ந்து வெளிவருவதற்கு உதவும்படி அன்புடன் வேண்டுகின்றது காகம்.

அத்துடன் உங்களுக்குத் தெரிந்த நல்லதொரு வாசகரை காகத்திற்கு அறிமுகம் செய்து உதவுங்கள்.

காகம்



படிப்பகம்

www.padippakam.com

# சரியாசனம்

நெடுங்கதை

முல்லையூரான்

(3)

பங்குனி

இன்று சனிக்கிழமை. வாரத்தில் ஐந்து நாட்களும் எனது வாழ்க்கை அந்த பிளாஸ்ரிக் தொழிற்சாலையில் கழிந்துவிடும்.

வெள்ளிக்கிழமை வீடுவந்து சந்தோசமாகப் படுத்து சனிக்கிழமை காலை பிந்தி எழும்பி எனது சொந்த நினைவுகளில்மூழ்கியெழுதல் ரம்மியமானது.

எனது மகள் கமீலா இன்னமும் எழுந்திருக்கவில்லை. அவளுக்கும் இன்றுதானே ஓய்வுநாள். பாடசாலை செல்கிறாள் என்றாலும் வாரநாட் களில் மட்டும்தானே பிள்ளைகளும் ஓய்வெடுத்துக் கொள்வார்கள். அவளுக்கும் 14 வயது ஆகிவிட்டது.

நேற்றுப்போல.....நானும் கென்றிக்கும் திருமணம் செய்துகொண்டபோது மகள் கமிலாவுக்கு 1வயதுதான்.

எனது முன்னைய கணவன் கென்றிக்கின் நினைவுகள் என்னுள் தொற்றிக் கொள்கிறது.

ஆம்பிளை என்ற அகங்காரம் அடக்கிஆளும் தன்மை, எதிலும் ஆரம்பத்தில் எனது விருப்பங்களுடன் ஒத்திருந்த அவன் காலம் செல்லச்செல்ல அவனது விருப்பங்கள் வித்தியாசப்பட்டபோது....பிரச்சனை பூதாகாரமாகப் பற்றமுன்பே அவனும் நானும் விவாகரத்துப் பெற்றுக்கொண்டுவிட்டோம்.

இதன்பின் 2 வருடங்கள் நடந்த தனிப்பறவை வாழ்க்கையும் சலித்துப்போகவே ஊலவைத் த்தேர்ந்தெடுத்து சேர்ந்து வாழ்ந்துகொண்டிருக் கின்றேன். இன்னமும் எங்களுக்கு திருமணமாகவில்லை.

ஊல அன்பானவன். நல்லவன். எனது மகள் கமிலாவுக்கு அவன் சொந்தத்தகப்பனாக இல்லாவிட்டாலும் அவளுடன் அன்பாகவே இருக்கிறான்.

எனது வாழ்க்கை எனது உழைப்பிலும் பிள்ளைகளை பராமரிப்பதிலும் போய்விடுகிறது.

பக்கத்துவீட்டு தமிழ்ப்பெண் கலாவிடம் எனது வாழ்க்கையைப்பற்றி சுருக்கமாக சொல்லிக்கொள்கி றேன். அதிசயமாக அவள் என்னைப் பார்த்துக்கொண் டிருக்கின்றாள். அவளுக்கு எங்களது கலாச்சாரம் வாழ்க்கைமுறை விளங்காதது தானே. அவள் ஆச்சரியப்படுவதில் என்ன இருக்கிறது.

இன்று அவளை எனது வீட்டுக்கு அழைத்திருக்கிறேன். அகதியாகப்போய்விட்ட இவளைப்போன்றவர்களுக்கு நாம் ஆறுதலாக இருக்கவேண்டும். இவர்கள் தனிமையில் வாடுபவர்கள். பல இழப்புக்களைச் சந்தித்தவாகள். இவர்களுக்கு எமது சிரிப்பு ஒன்றே பலத்த ஆறுதலாக இருக்குமல்லவா?

கலா கோப்பி குடிக்கமாட்டாள். அவளுக்குப்பிடித்த சைலோன் ரீ யை எடுத்து சுடச்சுட அவளது "கப்" பில் ஊற்றிவிடுகிறேன்.



படிப்பகம்

www.padippakam.com

நன்றிசொல்லிக்கொள்கின்றாள்.
கூடவே அருகிலிருந்த கேக்துண்டையும் எடுத்து மெதுவாகச் சாப்பிடுகின்றாள். இவள் எவ்வளவு அடக்கமானவள்.

கலாவின் காலுக்குள்ளால் நுழைந்து அவளது பூச்சேலையை விலக்கிக்கொண்டு எனது கறுப்புப் பூனை "மிஸ் எனது மடியில் தாவிக்கொள்கிறது. மேசையிலிருந்த கேக்துண்டொன்றை அதனது வாயில் ஊட்டி அதனைத் தடவிவிடுகின்றேன்.

கலாவை சேட்டைக்கு அழைக்கும் எனது நாய்க்குட்டியை தடவி எடுத்து கதவைத்திறந்து வெளியே "காற்று வாங்கி வா!" எனச்சொல்லி அனுப்பிவிடுகின்றேன்.குளிருக்கு ஒருமுறை உடலை உலுக்கிவிட்டு அது ஓடுகிறது.

என்னிடம் உங்களைப்போல புதிய சாமான்கள் ஒன்றுமில்லை. இருந்தாலும் வா! எனது வீட்டை ஒருமுறை சுற்றிக் காட்டுகிறேன் என்றபடி கலாவை அழைக்கிறேன் அவள் பின்தொடர்கிறாள்.
நான் எனது சிறுவயதிலிருந்து சேகரித்துப்படித்த புத்தகங்கள் இவை.இவை உனக்குத் தெரியும்தானே! வைன்போத்தல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த அலுமாரியை திறந்து காட்டுகின்றேன்.எதிர்ச்சுவரில் தொங்கிக்கொண்டிருக்கும் படம் அது;வெனிஸ் மக்களுடைய அனேகவீடுகளில் காணலாம். ஒரு கடற்கரையில் ஒரு ஆணும் பெண்ணும் ஒரு நாயுடன் உலாச்செல்லும் காட்சியில் கலா பிரமித்துநின்றாள். காலடியில் கிடந்த அந்த குளிர்தாங்கும் விரிப்பை எடுத்துக்காட்டி "இது எனது அம்மாவின் அம்மா பாவித்தது. எனக்கு முதுசமாகக் கிடைத்தது" என்றுசொல்லி அதை எடுத்து உயர்த்திக் காட்டும்போது அதில் ஒட்டிக்கிடந்த நாயின் உரோமங்கள் நிலத்தில் விழுகின்றன. "நீ வருவதற்குள் தூசி துடைத்து சுத்தமாக்க எண்ணியிருந்தேன். அதற்குள் நீ வந்துவிட்டாய்" என்று சொல்லியபடி அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றேன்.
ஒன்றுமே பேசாது மூக்கைப்பிடித்தபடி சிரித்துக்கொள்கிறாள் கலா.

எனக்கு இவளது சிரிப்பும் பாவனைகளும் சரியாக விளங்கவில்லை. இவள் என்ன நினைக்கிறாள் என்பதைக் கூட புரிந்துகொள்ளமுடியவில்லை. தலையை ஆட்டுகிறாள் சிரிக்கிறாள் "ம்" என்கிறாள். நாம் வேறுவேறு கலாச்சாரங்களை உடையவர்கள். அதுவும் பலமைல்களுக்கப்பாலிருந்து வந்தவள். இவளுடன் பழகப்பழக இவளைப்புரிந்து கொள்ளலாம் என்று எனக்குள் நினைத்துக்கொள்கின்றேன்.
ஒற்றையடிப்பாதைபோலிருந்த நடைபாதை வராந்தாவைத்தாண்டும்போது இடதுபக்கத்தில் கிடந்த எமது படுக்கை அறையைக் காட்டுகிறேன். அதில் எனது பூனை படுத்திருந்தது. அதனை அணைத்துக்கொஞ்சிவிட்டு கலாவை அழைத்துக்கொண்டு ......
இது மகள் கமிலாவின் அறை அவள் தூங்குகின்றாள் அவளைக் குழப்பக்கூடாது என்கிறேன். கலா தலையாட்டி சம்மதிக்கிறாளா? அல்லது மறுப்புத்தெரிவிக்கிறாளா? என்று புரியாமல் என்னை தடுமாறவைக்கிறாள்.அதனை ஒட்டியிருப்பது சமையலறை. மதிய உணவுத்தயாரிப்பில் மூழ்கியிருந்த எனது காதலன் ஊல "நாங்கள் முன்னரே ஒருவருக்கொருவர் அறிமுகம்செய்தோமல்லவா? என்று கேட்டுக்கொண்டே சலாட்இலை எனப்படும் ஒரு பசிய இலைவகையை நறுக்குவதில் கண்ணாயிருந்தான்.

"இன்றைக்கு ஊலதான் சமையல். நன்றாகச் சமைப்பான்." என்றபடி அடுத்திருந்த குளியலறையையும் காட்டிவிட்டு ......மீண்டும் அந்த கறுப்புநிற சோபாவில் நானும் கலாவும் அமர்ந்து கொள்கிறோம்.
இன்னொருதடவை தேனீர் அருந்தலாமா? எனக்கேட்டு அவள் தலையாட்ட நான் பரிமாறுகின்றேன்.

வெயியே குளிர்தான்....இருந்தாலும் இருவரும் ஒரு நடைநடந்துவிட்டு வருவோமா? என்றபடி கலாவோடு வீட்டுமாடிப்படிகளில் இறங்குகின்றேன். ஐந்தாவது மாடிப்படிகளில் பதுங்கிப்பதுங்கி தனது சேலை காலில் இடற இடற களைப்புமிகுதியால் இளைத்தபடி கலா வந்தாள். இருவரும் வீதியில் இறங்கினோம்.

வழமைக்கு மாறாக இந்த பங்குனி மாதத்திலும்



படிப்பகம்

www.padippakam.com

இந்த ஆண்டு பனிகொட்டியிருக்கிறது ......உனக்குக் குளிரவில்லையா? என கலாவைக் கேட்கிறேன்.
தான் அணிந்திருந்த தடித்த கறுப்புக் கோட்டைக்காட்டி தலையாட்டுகின்றாள்.

இருமருங்கும் வீதிகளில்மருங்கில் பூத்துக்கிடக்கும் வின்ரர்டேக் எனும் வெண்ணிற அழகிய பூக்களைப்பார்த்தவாறு நடக்கிறோம்.இருமருங்கும் இருக்கும் வீடுகளின் கூரைகளிலிருந்து புகைபோக்கிகளால் புகை தள்ளியது.
மரங்கள் பட்டுப்போயிருந்தன.இனி துளிர்க்கும்காலம்.

எதிரே வந்த பேக்கரியையும் தாண்டி நேராக நடந்தோம். புகையிரதத்தண்டவாளத்தைக் கடந்துசெல்லும் போதுதான் நான் கலாவைக் கேட்கிறேன்.
நீ அழகாக இருக்கிறாய். ஆனால் உனது உடைந்து போன பல்லையும் நீ ஏன் கட்டுவிக்கக்கூடாது? என்று அவளைக் கேட்டுவிடுகிறேன்.

அதில் தனது கணவன் ரவிக்கு சம்மதமில்லையாம். அதனால் தான் இப்போது அவனிடம் இதுபற்றிக் கேட்பதே இல்லையாம்.

ஏன் உன்னிடம் பணம் இல்லையா? என்றபோது நின்று கைகளை விரித்துக்காட்டிவிட்டு அதற்கும் சிரிக்கிறாள்.
என்ன பரிதாபத்திற்குரிய பெண்ணாக இவள் இருக்கிறாள்.
சைக்கிளாவது ஓடுவாயா? தினமும் உனது மகளைக்கூட்டிக்கொண்டு பராமரிப்பு நிலையத்துக்கு சென்று வருகின்றாயே கடினமாக இல்லையா? என்று நான் கேட்டதற்கு .......
தனது ஊரிலேயே பெண்கள் சைக்கிள் ஓடுவதற்கு பெற்றோர்கள் அனுமதிப்பதில்லையாம் என்கிறாள்.

"நீ இந்த நாட்டுக்கு வந்ததன்பின்பு இந்த நாட்டு காலநிலைக்கேற்ப்ப உடையையும், வாழ்க்கைக்கு ஏற்ற பொருட்களையும் பாவிக்கத்தொடங்கவேண்டும். அல்லது இந்த நாட்டில் வாழுவது உனக்குக் கடினமாக இருக்கும் என்கிறேன்.
கலா அதற்கும் தனது தலையைத்தானே ஆட்டுகின்றாள்.
இதோபார் உனது நெற்றியிலுள்ள சிகப்பு அடையாளம்கூடக் குளிரில் கரைந்துவிட்டதே!
நீ உனக்கு விருப்பமானவாறு வாழத்தான் வேண்டும். ஆனால் அதற்காக இந்தக் குளிருக்குள்ளும் சேலை, பொட்டு என்று உன்னை ஒருவட்டத்திற்குள் பூட்டிக் கொள்ளக்கூடாது என்கிறேன்.
அவள் என்னசெய்வாள் தனது தலையைத்தானே ஆட்டுவாள்.

பெரியபெரிய நீட்டு வாகனங்கள் அந்தச் சந்தியை வளையும்போது எதிரே இருந்த அந்த தொழிற்சாலையைக் காட்டி "அதோ அதுதான் நான் வேலைசெய்யும் தொழிற்சாலை. ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்பு அந்த இடத்தில்தான் நான் எனது பெற்றோருடன் வாழ்ந்தேன்.
எனது குழந்தைப்பருவம் இங்கேதான் ஆரம்பமானது. காலஓட்டத்தில் இங்கு பல தொழிற்சாலைகள் உருவாகி நாம் வாடகைவீட்டுக்கு மாறி ......இதோ! இந்த கம்பிபோட்ட எல்லைகளுக்குள் முன்னர் கட்டடங்கள் இல்லை. அப்பிள் மரங்களும்,பிளமப் பழங்களுமாக நாங்கள் விளையாடிவிளையாடியபடியே பிடுங்கித் தின்போம்.
முன்னரெல்லாம் நான் சிறுபிள்ளையாக இருந்தபோது; இந்த கல்லுத்தார்வீதி இல்லை.மண்வீதி.அப்பாவின் குதிரைவண்டியில்தான் நாம் எல்லோரும் பயணம்செய்வோம்.இவையெல்லாம் 50ம் ஆண்டுசொச்சக்கால வாழ்க்கை.
எனக்கு அவ்வளவாக நினைவில்லை
ஆனால் இப்போது நாம் செல்வந்த நாட்டுக்கு சொந்தக் காரராக இருக்கிறோம்.ஆனால் நாங்கள்......? கலாவுக்கு இவை விளங்குமோ? என்ற கணிப்பில் பேச்சை நிறுத்திவிட்டு ......

கலா! நீ வந்ததிலிருந்து என்னை ஏதாவது கேட்ப்பாய் என்று காத்திருந்தேன். ஆனால் நீயோ கேட்கிறாயே தவிர ஒன்றையும் வினவவில்லையே? என்றவுடன்தான் கலா கேட்டாள்
"உன்னுடைய எதிர்காலக்கனவு என்ன காயா?

கேட்டவளை சந்தோசத்தோடு நிமிர்ந்து நின்று பார்த்து சொல்கிறேன். "நிலத்தோடு ஒரு தனிவீடும்,எனக்கென ஒரு பெரிய அறைக்குள் பெரியதொரு பியானோவும் எனது குடும்பமும்.....நானும், சந்தோசமும்.

(தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com



# மலர்தல்
# வாடல்
# தெரிதல்.

.......................................................பூமி

கண்ணீர் நிலையம்

மனிதர்கள் அவசரப்படாது காத்து நின்றனர்.

முகங்களில் எதிர்பார்ப்புக்கடல் அலையடித்தது. இவர்களில் பலர் கைகளில் சிகப்பு நிறத்திடையே குறுக்கும் நெடுக்குமாய் இழுத்த வெண்ணிறக் கோட்டுவடிவ டென்மாக் தேசியக்கொடியை பிடித்தவண்ணம் நின்றனர். ஒருவரை விமானநிலையத்தில் வரவேற்கும் போது இவ்வாறு டனிஸ்மக்கள் நடந்துகொள் வார்கள் என்பதும் எனக்குத்தெரியும்.

ஆனால் அகதியானபின் நான் டென்மார்க்கில் ஒரு நிழலில் நின்று இரைமீட்கும் ஒரு வயதான மாட்டைப்போல................

நானோ அத்தேசியக்கொடியை உரிமைகொள்ளாத மனத்தினனாய் .......

ஒரு வருடங்களிற்குப் பிறகு என்னிடம் வரப்போகின்ற எனது மகனுக்கான அந்த பந்தும் எனது மனைவிக்காக ஒருகுளிர்தாங்கும் உடையுமாக தொங்கிக்கொண்டே ஓடிக்கொண்டிருக்கும் மணிக்கூட்டில் நானும் தொற்றியவாறு இருக்கிறேன்.

எனக்குள் ஆயிரம் குதிரைகள் தினவெடுத்து ஓடுதல்போல சப்தம்.

அவை மிதித்தஇடமெல்லாம் புண்கள்.நோக்கள். இடைக்கிடை பூக்கள் நசுங்கிவிரிவதுபோல அசரீரி.

மலசலகூடக்கதவுகளை பலமுறை திறந்து மூடினேன்.உள்ளங்கை வியர்த்தது.

வெளிநாட்டிலிருந்து வந்து தரையிறங்கும் விமானங்களின் இரைச்சல்களை கேட்கக்கேட்க சந்தோசமாக இருந்தது.

நீலநிற சீருடைஅணிந்த நகர்காவலர் இருவர் என்னைத்தாண்டிப்போயினர்.

ஒருகுழந்தை பலூன்ஒன்றுடன் அல்லாடியது. எனது குடும்பத்தினரின் வருகைக்காக இந்த மண்டபத்தில் தவமியற்றும் என்னைப்போலவே



படிப்பகம்

அந்தப் பந்தும்; அந்தக்குழந்தையைப் பறித்துக்கொண்டோட முயற்சித்தது.

"ஒன்றுமே வராது.".என்று இருந்துவிடுவது ... காற்றில் பஞ்சு பறப்பதைப்போல...விழுவேன் என்றோ? எங்குவிழுவேன் என்பதிலோ அறிவற்ற காற்றோடு காற்றான வாழ்வு.
இன்றைய இந்த பணம்தின்னும் உலகில் இத்தகைய வாழ்க்கையை யார்,? எவ்விடத்தில் தேடுவது?
அசையாது கிடக்கும் கல்போல அவர்களை எதிர்பார்த்து எதிர்பார்த்து....கல்லின் சுமை மலையாகியது.
எனது மழலை மகனின்முகம் மனத்திடையே பரவும்.பெருமூச்சு கேட்காது தன்பாட்டில் ஓடும். நேரம் அசைவதாகத்தெரியவில்லை.இதயம் மணிக்கூட்டுக்கம்பிகளின் உரசலில் கிராய்த்தது.
இதோ எனது குடும்பத்தினர் வந்துவிடக்கூடாதா? என்ற ஏக்கம் தனக்குத்தனக்கென........ படக்குப்படக்கென சுழகடித்தது.
எப்படியும் வந்துவிடத்தான்போகின்றார்கள் என்ற நம்பிக்கை மட்டும் பாஸ்போட்டில் குத்திய விசாப்போல அமுங்கிக் கிடந்தது.
அகதிகளை அனுமதிக்கும் நாடுகளில் டென்மார்க்நாடு அகதிகள் அவர்தம் குடும்பத்தினரை வரவழைத்துக்கொள்ளும் அனுமதிரை வழங்கியிருக்கிறது.
இன்று இந்த குளிரில் குதம்பிய மண்ணை முத்தமிடவேண்டும்.
இந்த மண்ணின் சொந்தக்காரரை நான் அரவணைத்து அழவேண்டும் போலிருந்தது. எனது உதடுகள் நடுங்கின.
கண் பனித்துக் கன்னம் சுட்டது.
மீண்டும் ஒரு சிகரட்டை மூட்டிக்கொள்கிறேன். பயணிகள் வெளியே வருவதும் உறவினர்கள் தாவித் தழுவிக்கொள்வதுமாக அந்த இடம் சந்தோசத்தால் கைதட்டிக்கொண்டிருந்தது.

அதோ விமானங்கள் தரையிறங்கும் இரைச்சல் அல்ல..அல்ல.....அந்த சங்கீதம் எழுகிறது.
எனதுமனைவியும்,எனது மகனும் வரும் விமானம் தரைதட்டிவிட்டதாக அறிவிப்புப்பலகையில் பசும் வண்ணத்தில் மலர்கிறது.
எழுந்து நின்றுகொள்கிறேன்.
தடுத்துக்கிடக்கும் உரத்த கண்ணாடிவழியாக கண்களால் குத்திக்கொண்டு அங்குமிங்கும் தேடுகிறேன்.
அதோ! அவர்கள்தான்.
எனது பிஞ்சுமகன் தாயில் கைகளில் இருக்கிறான்.
அதே பஞ்சுமுகம்.
வாடா! என வாய் இரகசிக்கிறது.
என்னருகே வருகின்றார்கள்.
மகனை தாயின் கைகளிலிருந்து பிடுங்கிக்கொள்கிறேன்.
நசிந்து என்னிடமிருந்து வழுக்கிக்கொள்ளும் அவனை இறுக்கிக்கொள்கிறேன்.
சனசந்தடிஅற்ற ஓரமாய் அவனோடு அவசரமாக பேச்சுக்கொடுக்கிறேன்.
"என்னைத்தெரியுமா?"
"மாமா" என்கிறான் என்னை எனது மகன்.
தாவணியின்தொடர என்னைப்பின்தொடரும் மனைவியையும் அழைத்துக்கொண்டு வீதியில் இறங்குகிறேன்.
உலகத்தின் எல்லா போர்களும், பிரச்சனைகளும் முடிந்துவிட்டதாக மனதுக்குள் சந்தோசம்.

காடேகும்போது கூடவே மனைவியையும் அழைத்துச்சென்ற இளவரசர்களின் கதையில் அவர்களுக்கு காடே நாடாக இருந்திருக்கும். ஆனால் எனக்கோ இந்த நாடே காடாக அல்லவா இருந்தது..........
இப்போது சந்தோசமா? என்றது குளிர்காற்று.
இருவரை அன்னியமாக்காத வகையில் உலகஒழுங்கொன்று வருமென்றால் அதற்கு நானே முதற்படையில் சாகலாம்.
நாலுகால்கள் காற்றில் நடந்தன.
இரண்டுபிஞ்சுக் கால்கள் எம்முடன் இருந்து வந்தது. இனி இலைதுளிர்காலம்தான். ■

www.padippakam.com

வாழ்க்கையின் மிச்சம்
மரணம், நோய், துன்பம்,
அவலம் என்பவை
மட்டுமேயென்றால் அதை
வாழ்வதில் என்ன அர்த்தம்
இருக்கப் போகிறது ?
ஆனாலும் எத்தனை துயர்
நேரினும் வாழவேண்டும்
என்ற ஆவலோ ஒரு
தலைமை நியதியாக நின்று,
எல்லோரையுமே வாழும்படி
தூண்டுகிறது. நாம்
எட்டிவிடத் துடிக்கும்
உச்சங்களையெல்லாம்
தாண்டி, காலமும் மரணமும்
தீண்டிவிட முடியாத
உன்னதமொன்று வாழ்வில்
மறைந்து கிடக்கிறது. இதை
அறிந்துகொள்ளவே நாம்
பிறந்திருக்கிறோம் !
என்னும் உந்தலே
வாழவேண்டுமென்ற
ஆவலாக நம்மில்
தொழிற்படுகிறது. அறிவைச்
கூர்மைப்படுத்தி இந்த
உண்மையைத் தேட
முடியாதபோதே மனிதனை
மரணம் வெற்றிகொள்கிறது.
இதை அறியும் போதோ
மரணமே அவனது
பிரசவமாகிவிடுகிறது.
இத்தகைய வாழ்வியல்
உன்னதத்தை அறிவால்
கண்டு, சிறு பூவையும்
நோகச்செய்யாது, அளவோடு
வீசும் தென்றல் போல
எல்லோர்க்கும் இனியவராக
வாழ்ந்த தமிழறிஞர்
ஒருவரைப்பற்றி ....

வரலாறுக்கு ஒரு கடிதம் : 06

*தமிழின் தென்றல் காற்று*

**வித்துவான்**

# சி. குமாரசாமி

கே. எஸ். துரை

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை என்பது கலை நித்திய கொலுவிருக்கும் அழகியற் கூடம். உள்ளே போய்விட்டால் எல்லாத் துயரங்களும் கழன்று விழுந்து போக, கலையும் தமிழுமே வாழ்வாகி உயிர் உவப்பிலா ஆனந்தமடையும்.

அங்கு வருடந்தோறும் நாடகவிழா தவறாது நடைபெறும். உயிரைத் தொட்டு உணர்ச்சியோடு நடித்துவிட்டுக் கீழே இறங்கினாலும் ஓடிவந்து ஆரத்தழுவி, இரு கண்களாலும் நீர் வழிய வாழ்த்தும் சிரோமணியார்.

"இன்று நாடகத்தில் அரச வேடம். காலாபாசு முறையில் சேலை கட்டுவது எப்படி ?" என்றதும், "இப்படி வா" என்று கூறி, முகத்தலையை கோணலாக மடித்து, வரிவரியாய் சுருக்கிட்டு, கொய்சுகத்தோடு சேலைகட்டி, கண்ணுக்கு எடுப்பாய் புருவம் தீட்டிவிடும் பரதக்கலைஞன் வேல் ஆனந்தன்.

இனி நாடகப் பிரதியை எப்படி உருவாக்க வேண்டும் ? சிறுகதைகளை கவிதைபோல நறுக்காக வெட்டி ஒட்டுவது எவ்வாறு ? என்றெல்லாம் அருகிருந்து சொல்லித் தந்து, நமது கதைகளைத் தானே அச்சு வாகனமேற்றி, தன் கதைகள் போலவே மகிழ்ந்து போகும் முல்லைமணி.

கல்விக் கடலில் ஆழ்ந்து, அகன்ற புலமை கொண்டு, மேடைப் பேச்சுக் கலையை பிரித்துப் பிரித்துப் படித்துத் தந்த மூதறிஞர் வை. கா. சிவப்பிரகாசம் . புல்லுக்கும் நோகாது நடந்துவந்து கருத்துக்களால் எரிமலையாய் வெடித்து, எம்மையும் கவிபடிக்க வைத்த ஈழத்து முருகையன்.



படிப்பகம்

www.padippakam.com

தூரத்தில் வந்தாலே போதும் காற்றே நின்று போய்விடும் உயர்ந்த நிர்வாகி. எல்லோரும் ஏகோபித்து, " அம்மா " என்று அழைக்கும் தலைமைச் சக்தி அதிபர் திருமதி ஆனந்தக்குமாரசாமி ! மூதறிஞர் சொக்கன், உளவியல் நிபுணர் துரைராஜா என ஈழத்தின் தலைமைக் கலைஞர்களெல்லாம் ஒன்றாக நின்று ஆசிரியர்களைச் செதுக்கியெடுத்த சிற்பக்கூடம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை.

கல்யாணி அமிர்த வர்ஷினி , என அங்குள்ள கட்டிடங்களுக்கே இராகங்களின் பெயர்தான். இந்த அழகிய கலைக்கூடத்திற்கு ஓர் ஆயனச்சிற்பி என்று கூறக்கூடிய தகமை கொண்டவர் விரிவுரையாளர் வித்துவான் நமினை குமாரசாமி.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நுண் பொழுதும் கலைநிலவு பொழியும் இக் கலாசாலை வருடத்தில் இரண்டு நாட்கள் முற்றாகவே ஸ்தம்பித்துப் போய்விடும். ஏனென்றால் அந்த இரண்டு நாட்களும் அங்கு முத்தமிழ் விழா.

அந்த முத்தமிழ் நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி, தமிழ் அழகு தள்ளாடாது வைரம் பாய்ந்த நடை பயில்பவரே வித்துவான் குமாரசாமி. தூய தமிழ்த் தேசிய உடை, நல்ல முத்தின் கருமை , வெள்ளிக் கம்பிபோல வகிர்ந்த தலைமுடியுமாய் இன்றும் அப்படியே என் கண்களுக்குள் நடந்து போகிறார் அந்த தங்கத் தமிழர்.

தமிழகத்தில் தமிழ்த் தென்றல் திரு. வி. க. பேராசிரியப் பெருந்தகை டாக்டர் மு. வரதராசன் போன்றவர்களின் வாழ்வியல் அழகோடு எப்படித் தமிழ் குழைந்து நிற்கிறதோ ? அதுபோல ஈழத்திலும் சீரிய வாழ்வுகண்ட தமிழறிஞர் வரிசையில் தவறாது வைத்து எண்ணப்பட வேண்டியவர் வித்துவான் குமாரசாமி.

தமிழ் மக்களின் வாழ்க்கையில் இரண்டு பிரதான பிரிவுகள் இருக்கின்றன. அதில் ஒன்று தமிழரின் வாழ்வு. மற்றயது தமிழ் வாழ்வு. மேதமைக்கும் பைத்தியத்திற்கும் ஒரு மயிரிழையே வித்தியாசம் என்பது போல, தமிழ் வாழ்வுக்கும் : தமிழர் வாழ்வுக்கும் உள்ள வித்தியாசமும் அதே மயிரிழை போன்றதே.

இன்று தமிழர்கள் உலகெல்லாம் பரந்து கால நீரோட்டத்தை வெற்றி கொள்ள முடியாது ஏதோ ஒரு வகைச் சமரசம் செய்து கொண்டு வாழ முற்படுவது போன்றதே தமிழர் வாழ்க்கை. ஆனால் பண்டைத் தமிழர் வாழ்வைத் தெளிவுறக் கற்று, வாழ்வையும் தமிழையும் வேறுபடுத்தாது இரண்டறக் கலந்து வாழ்வதே தமிழ்வாழ்வு. குமாரசாமி மாஸ்டர் இந்த இரண்டாவது வாழ்க்கை முறைமையை அழகோடு வாழ்ந்தவர்.

இன்று போலவே அன்றும் ஆசிரிய மாணவர்கள் கொதி நிலையிலுள்ள கருத்துக்களை வாள் போல ஏந்தி : தாம் நினைப்பதே சரியானதென முடிவுகட்டி, ஒருவர் மீது ஒருவர் வீசி நொந்து போவர். கடைசியில் அனைவரும் வேதனையடைந்து ஆறுதல் பால் தேடும் கன்றுகளாகி குமாரசாமி மாஸ்டரிடமே போவர்.

"பாலின்சுவை, பழத்தின் இனிமை, குளிர் நிலவின் ஒளி, பறவைகளின் இனிய கானம், இயற்கைக் காட்சிகள் போன்ற தீமை கலவாத இன்பங்கள் உலகில் எவ்வளவோ உள்ளன. இவற்றில் வன்பும் இல்லை, துன்பும் இல்லை, உடலுக்குத் தீங்கும் இல்லை. இவ்வளவு கருத்து மோதல் கொள்கிறீர்களே உங்கள் வாழ்வில் இவைகளுக்காக தினசரி எவ்வளவு நேரத்தை ஒதுக்குகிறீர்கள் ?" என்று கேட்பார்.

சேரன் செங்குட்டுவன், இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனார் ஆகிய மூவரும் ஒரு சமயத்தைச் சேர்ந்தவரா ? இல்லையே. ஒருவர்



படிப்பகம்

www.padippakam.com

சைவர், மற்றவர் அருகர், இன்னொருவர் புத்தர். இவர்களில் முதலிருவர் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள். இவர்களிடையே எரி — பகை — பூசல் இருந்ததா? இல்லையே. உண்மைத் தமிழ் அன்பே அங்கு உறவின் அச்சாணியாய் ஊடுருவியிருந்தது. பகையற்ற வாழ்வைத் தருவது தமிழர் வாழ்வல்ல. தமிழ் வாழ்வே என்று மு.வரதராசனையும், திரு. வி. க. வையும் எல்லோருக்குமாகப் படித்துக் காட்டுவார்.

அப்போது எண்பதுகளின் ஆரம்பம். நாம் தனித்தமிழ்பற்றி நிறைய விவாதித்த காலம். குமாரசாமி மாஸ்டருடனும் தனித்தமிழ் பற்றி நிறைய உரையாடினோம். சீரிய கருத்துக்களால் நம்மைப் பண்படுத்தினார்.

"தமிழால் எந்த ஆழத்தையும் எட்ட முடியும். எந்தச் சிகரத்தையும் தொடவும் முடியும். ஆனால் ஒன்று; தனித்தமிழ் என்பது தமிழர் பண்பாட்டை, இயற்கையை, கலைகளை, தமிழர் மானத்தையெல்லாம் தழுவிய அகண்ட பொருளுடையதாகும்! " என்றார். அப்போதுதான் நாம் அணியும் ஆடைகள், நம்மை ஆளும் சட்டங்கள், நமது விளையாட்டுக்கள், போன்ற பல விடயங்களை தனித்தமிழ் பற்றிப் பேசும் போது நாம் அறவே மறந்துவிடுவதும் தெரிந்தது. அந்த விவாதமும் முடிவில்லாது நீண்டு போனது.

உலகத்தில் ஓய்வில்லாத உழைப்பாளி எறும்பு. இவரும் உழைப்பில் எறும்பு போலவே. மிகக்கஷ்டமான ஒரு நிலையிலிருந்து, ஓய்வில்லாத உழைப்பால் உயர்ந்த இடத்தை எட்டிப் பிடித்தவர். வித்துவானாகவும், எம் . ஏ ஆகவும் இவர் பெற்ற சிறப்புக்களில் எந்தக் குறுக்கு வழிகளும் கிடையாது. எப்போதுமே உயர்வு முக்கியமல்ல : அதை அடையப் போகும் பாதையின் புனிதமே முக்கியமானதென்றார். இதனால் நேர்வழி சென்று விரிவுரையாளர் பதவியை எட்டிப் பிடிக்க; கூடவே முதுமையும் அவரை எட்டிப் பிடித்திருந்தது.

கனிந்த தமிழ்க்கனியான இவரை முட்டவிழ்க்கும் ஆசான் என்றே யாவரும் போற்றுவார்கள். எந்தவொரு பழந்தமிழ்ப் பாடலானாலும் எங்கே இருக்கிறது என்று தேடத்தேவையில்லை. இவரிடம் கேட்டாலே போதும். பாடல் இலக்கம் , பாடிவர் பெயர், பொருள் உட்பட யாவற்றையுமே ஒரு நொடியில் கூறிவிடுவார். இதை யாழ். நூல்நிலையம் எரிந்த நிகழ்வோடு அடிக்கடி ஒப்பிடுவேன். எரிந்து போனது யாழ். நூல்நிலையக் கட்டிட ங்களும், நூல்களுமேயல்லாது அந்த நூல் களிலிருந்த அறிவுச்செல்வங்களல்ல என்ற உண்மையை அறிந்துகொள்வேன்.

மாஸ்டரின் தமிழால் கவரப்பட்டு, சனி ஞாயிறு கூட கலாசாலைக்குப் போவோம். எவ்வளவுதான் ஐக்கியப் பட்டாலும் ஆசிரியர் பயிற்சியை முடித்ததும் நாம் அங்கிருந்து வெளியேற வேண்டும். அந்தத் துயரால் நொந்த முல்லைமணி , "ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சிறந்த மாணவர்களை விரிவுரையாளராக்க வேண்டும்!" எனப் பிரேரித்தது இன்றும் என் நினைவிற்குள் அலைகிறது.

விலகிப் போகும் கடைசிநாள் இந்த அரிய மனிதர்களோடு வாழமுடியாது பிரிகிறோமேயென எல்லோரும் அழுதோம். ஆனாலும் கல்வியமைச்சு இலங்கையின் சகல பாகங்களுக்கும் அனைவரையும் சிதறடித்தது. இதன் பின் சில நாட்களில் நல்லூர் சென்றபோதுதான் அந்தக் காட்சியைக் கண்டேன். அங்கேயே மனமொடிந்து விழுந்தேன்.

நல்லூர் கோயிலின் முன்னால் ஒரு சிறிய பான்சிக் கடை திறந்து வியாபாரம் செய்து கொண்டிருந்தார் வித்துவான் குமாரசாமி. ஓய்வு பெற்றபின் அவர் தமிழறிவு அங்கு யாருக்குமே தேவைப்படவில்லை. ஊசிக்கும் நூலுக்குமாக யாரோ ஒருவர் அவருடன் தர்க்கித்துக் கொண்டிருந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

உச்சிமேல் வைத்துப் போற்றப் படவேண்டிய ஒரு அறிஞரே தமிழால் வாழமுடியாதுபோன நம் சமூக அமைப்பையும், அதற்குக் காரணமான நமது ஊனப்பட்ட பொருளாதாரக் கட்டமைவையும் எண்ணித் துவண்டேன்.

தமிழையும், கலைகளையும் வாழ்வாக்க வேண்டுமானால் அதற்கு அசாதாரண பொருளாதார பலம் அவசியமென உணர்ந்தேன். ஒரு சில மாதங்களில் மத்திய கிழக்கு பயணமாக எண்ணி, மூன்றாண்டுகள் ஊதியமற்ற விடுப்புப் பெற்றேன். அதற்கு இக் கவலையும் ஒரு காரணமாயிற்று.

செய்தி அறிந்த குமாரசாமி மாஸ்டர் தாயகத்திலிருந்து வேரை அறுத்து விடக்கூடாதென எச்சரித்தார். ஒரு அழகான கவிதையும் எழுதிக் கொடுத்தார். அந்தக் கவிதையையும் எடுக்கமுடியாது, மத்திய கிழக்கும் போகமுடியாது காலம் என்னை டென்மார்க் துரத்தியது.

ஓய்வுக்குப் பின் நான் பெற்ற உயர் தமிழோடு வாழ முடியவில்லைத்தான். ஆயினும் என் அறிவை இந்தக் கடை வியாபாரத்தில் அழகோடு பிரயோகிக்கிறேன். பொய்யும், கலப்படமும், நிதானமற்ற விலைகளுமாக இருக்கும் நம் கடைகளுக்குள்ளும் தமிழின் வாழ்வு பிரவேசிக்க வேண்டாமா ? என்றும் கேட்டுப் பின்நாளில் கடிதம் எழுதியிருந்தார்.

அப்பொழுதுதான் தனித்தமிழ் என்பது வெறுமனே மொழியில் மட்டும் நடைபெறுவதல்ல முழுவாழ்வையுமே தழுவியது என்ற உண்மை தலைக்குள் மெல்ல வெளித்தது. அன்றுவரை முடிவேபெறாது மனதில் நடைபெற்றுக் கொண்டிருந்த தனித்தமிழ்ப் போராட்டமும் மெல்ல ஓய்ந்துபோனது.

கௌரவம் என்பது வெறும் படிப்பின் உயர்வால் வருவதல்ல : எத்தொழிலையும் செய்யத் தயங்காத மனோநிலையும் : செய்யும் தொழிலைத் தெய்வமாகக் காணும் பக்குவமும் நம்முள் வரும்போதுதான் நாம்கற்ற கல்வி கௌரவமடைகிறது என்பது அவர் வாழ்வில் தெரிகிறது. " தொண்டல்லால் உயிர்க்கு ஊதியமில்லை! " என்ற அப்பர் சுவாமிகளின் வாக்கு அந்தப் பெருமகனார் வாழ்வில் சுடர் விடக் காண்கிறேன்.

வித்துவான் குமாரசாமி இறந்த செய்தியை எனக்கு யாருமே அறியத்தரவில்லை. அவர் மறைந்த ஓரிரு வாரங்களில் பத்திரிகையில் வந்த மரண அறிவித்தலில் அந்தத் தமிழ் முகத்தைக் கண்டு துடித்தேன்.

இன்று வெளிநாடுகளில் தமிழர்வாழ்வைக் காணும்போதெல்லாம் தமிழ்வாழ்வு வாழ்ந்த குமாரசாமி மாஸ்டரின் பெறுமதியை மதிப்பீடு செய்ய முடியாது தடுமாறுகிறேன். ஆனாலும் அவர் இறப்பும் மனப்படிகளில் பல விளக்குகளை ஏற்றிவைத்திருப்பதை உணர்கிறேன்.

மனிதன் இறக்கும் போது ஊர் அழும். ஆனால் அறிஞன் இறக்கும் போதுதான் பாடசாலைகள் அழுகின்றன. வித்துவான் குமாரசாமி மாஸ்டர் இறந்தபோது தமிழீழத்தின் பாடசாலைகள் எல்லாமே அழுதிருக்கும் என்பதை என்னால் ஊகிக்க முடிகிறது.

பாடசாலைகள்தான் ஊரையும், நாட்டையும், உலகையும் உருவாக்குகின்றன. இறப்பால் உயர்வுகண்டோரே பாடசாலைகளால் படிக்கப் படுகிறார்கள். " பிறப்பல்ல; இறப்பே மனிதனை நிறுக்கும் தராசு." என்பதற்கு அவரும் உதாரணமானார். அதுபோல " அறிஞன் என்பவன் இறப்பின் மூலமே பிறக்கிறான்! " என்ற உண்மையையும் குமாரசாமி மாஸ்டரின் பிரிவில் மறைந்திருக்கக் காண்கிறேன்.



படிப்பகம்

www.padippakam.com

***சென்ற இதழில் தொடங்கப்பட்ட வழக்கில் பலவாசகர்கள் ஆர்வத்தோடு தமது கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்கள். மகிழ்ச்சி.***

***எல்லோரது கருத்துக்களும் இடவசதி கருதி சுருக்கித்தரப்படுகின்றது......................... காகம்.***

**வழக்காளி: செல்வன்: தமிழ்ச்செல்வன்** சார்பில்:

***ஜிந்து – தீனேஸ் சகோதரர்கள்.......றியூபோ.........***

● தந்தையார் மகனை வீட்டினுள் பூட்டிவைத்து தாக்கியது குற்றம்.இன்றைய வாழ்க்கைச்சூழ்நிலையில் நாம் இடம்பெயர்ந்த அகதிகள்.ஆனால் நாம் வாழ்வது டெனிஸ்நாட்டிலாகும்இங்கு டெனிஸ்மொழியை நன்றாக.மிகவும் கூடியநேரம் எல்லோரும் படிக்கின்றோம். இங்குள்ள கலாச்சாரம், பண்பாடு, வாழும்முறை என்பனவற்றை நன்றாக அறிந்துள்ளோம்.இந்த நாட்டில் எப்படியான சட்டதிட்டமோ அதை நாம் பின்பற்றுகின்றோம். எமது பெற்றோர் எம்மைத்தாக்கினால் "எதற்காக இப்படி நடந்துகொள்கின்றார்கள்" என நாம் பின்னர் உணரும்நிலை வருவதுண்டு.ஆனால் எம்மை ...கொடூரமாக தாக்குவதை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது.தமிழ்ச்செல்வன் என்ன ...பம் புரிந்தார் என்பது எமக்குத் தெரியாவிட்டாலும் தவறுசெய்தவரை கண்டிக்கும் உரிமை உண்டு. ஆனால் வீட்டினுள் பூட்டிவைத்து தந்தையார் தமிழ்ச்செல்வனை தாக்கியது மாபெரும் குற்றமாகும்.இப்படியான குற்றம் செய்யும் தாய்,தந்தையரை தண்டிக்கவேண்டும்.அப்போதுதான் தாம்செய்த தவறை உணரமுடியும்.

***செல்வி: ராஜேந்திரம் சுகிர்தா....றனாஸ்***

● இச்செயலினால் மகன் மனநோய் அடைந்திருப்பதனை தந்தை அறியார்.தாய்பிள்ளையானாலும்வாயும் வயிறும் வேறுதான். அதுபோல் தகப்பன் பிள்ளையானாலும் குற்றம் குற்றமே.உரியதண்டனை வழங்கவேண்டும்.

திருமதி:வேதா. இலங்காதிலகம் சொல்கிறார்

● "பெற்றார் அதிகாரத்தின் உள்ளடக்கம்." § .7 பகுதி 1:பிள்ளையை கவனித்தலும் பிள்ளையின் சொந்த நிலைக்கு முடிவெடுத்தலும்; பிள்ளையின் விருப்பத்தையும் தேவையையும் முன்னிட்டு இருத்தல்வேண்டும். என்பது பெற்றோர் அதிகாரத்தில் உள்ளடங்கியது.

பகுதி:2 பெற்றாரின் அதிகாரம் மனம்–உடல் சம்பந்தப்பட்ட வன்முறைகளிலும் மற்றைய அவமதிப்பு நடவடிக்கைகளிலிருந்தும் பிள்ளையை பாதுகாக்கும் கடமைபாடு உள்ளது.

ஒரு 15 வயதுப்பிள்ளையை இவ்வாறு தண்டிப்பது மிகப்பெரிய பிழையாகும். காரணம்: ஒரு பிள்ளைக்கு 12 வயதில் மூளை நன்கு அபிவிருத்தி அடைந்து தத்துவரீதியாகயதார்த்தமாக சிந்திக்கத் தொடங்குகின்றது.சமய,தத்துவ,அரசியல் ரீதியில் விளக்கங்களைப் பெற விரும்புகின்றன. அவை சரியானவை எனவும் எண்ண முயல்கின்றன.பின் 16 வயதிற்குள் பூப்புநிலையான பருவமடையும் காலம் வந்து பலமான, வேகமான உடல்மாற்றத்திற்கு ஆளாகின்றனர். அதாவது பிள்ளைப்பருவத்திலிருந்து வயதுவந்தவராகின்றார்.இந்த உடல்மாற்றங்கங்கள் பிள்ளைகட்கு வெட்கம்,ஆர்வம்,மனதில் நிச்சயமற்ற ஒருநிலையையும் உண்டுபண்ணுகின்றது.இந்த வயதில் ஏற்படும் மனக்குழப்பத்திற்கு தந்தையானவர் தனது அதி ஆதரவையும் அன்பையும் கொடுத்து சமையத்தில் பிள்ளைக்கு




படிப்பகம்

www.padippakam.com

நண்பனாகவும் மாறி வாழ்வில் ஆணின் கடமைகளை உணர வழிகாட்டியாக இருக்கவேண்டும். பெரியவர்களின் மதிப்பும் ஆதரவும் பெறும்போது பிள்ளை கம்பீரமாக தலைநிமிர்ந்து நிற்பான்.

பிள்ளையின் இந்த ஒன்றிணைந்த அனுபவம் எதிர்கால,தற்கால, கடந்தகாலங்களை இணைத்துப்பார்க்கும், கற்பனை பண்ணும் சந்தர்ப்பத்தை கொடுக்கின்றது. மேற்படி நன்மையின்றி தீமையானவழியில் வழிகாட்டப்பட்டால் வாழ்வில் பயமும், தன்னை அடையாளம் காணும் குழப்பமும் உருவாகும். இப்படிக் குழப்பம் உருவாகும் போது பிள்ளை பிழையாக தன்னை அடையாளம் காணும்.




சமுதாயத்தின் (வீட்டின்) அவமதிப்பு,அலட்சியத்தினால் எதிர்மாறான பல பாரதூரமான விளைவுகளுக்கு இடமுண்டு.

**1.ஏன் சிகப்பிரகாசத்தார் மகனைத் தாக்கினார்?**
**2.சிகப்பிரகாசம் ஆரோக்கியமான வாழ்வு வாழும் ஒரு தந்தையா?**
**3.இவர் குடிப்பவரா?**
**4.மகன் செய்த தவறு என்ன?**
**5.இங்கு தாயின் நிலைப்பாடு என்ன?**

என்றகேள்விகளோடு இவ்விடையத்தில் எல்லோரையும் சிந்திக்கச்சொல்கிறார் திருமதி.வேதா.இலங்காதிலகம் அவர்கள்.

இதுமட்டுமன்றி தகப்பனார் சிகப்பிரகாசத்தார் மகனைத் தண்டித்தது சரியானது என்கிறார் ஒரு குடும்பத்தலைவி: திருமதி.மல்லிகா. சௌந்தா–நியூபோ........................................................

● பலகாரணங்களுக்காக தந்தை சிகப்பிரகாசம் தன் மகனைத்தண்டித்திருக்கலாம். அவற்றில் சில: ஒவ்வொரு தந்தையும் தாயும் நினைப்பது நிறைவேறுவதில்லை. தனது பிள்ளை நல்லவனாகவும், நல்ல கெட்டிக்காரனாகவும் நன்றாகப் படித்தவனாகவும் வரவேண்டும் என்ற எண்ணம்தான் முதலில்வரும்.ஆனால் சிலதடங்கல்கள், அல்லது அவரது சமூகநிலைப்பாடு அல்லது அவர் வளரும் சூழ்நிலை இவற்றை அடிப்படையாகக் கொண்டுதான்: பிள்ளைகள் தமதுமேல்நிலைக்கு வருகின்றார்கள்.ஒவ்வொரு பெற்றோரும் தாம், தமது பிள்ளைகளை அடிப்பதானது: தமது பிள்ளைகள் நல்லநிலைப்பாடுகொள்ளத்தான்.நல்ல பழக்கவழக்கங்களை பழகவேண்டும் என்பதே அவர்களின் முதன்மைக் கோட்பாடாகும்.சிறிய வயதில் அவர்களை திருத்தமுனைவதில் தவறு என்பது இல்லை.பிள்ளை தீயபழக்கங்களை அனுகுவதை காணநேரிட்டால் உடனே தண்டித்து அதைப்பற்றிய முழுவிபரங்களையும் உணரவைப்பதில் தவறில்லை.வீட்டினுள் பூட்டிவைத்து தாக்கியது தவறானால் மிகப்பெரிய குற்றங்கள்: அதாவது 15 வயதில் ஏற்படுகின்ற குற்றங்களை திருத்தமுடியாது போய்விடும். எனினும் இன்றைய காலகட்டத்தில் தாக்கியது தவறு.ஆனால் தமிழ்கலாச்சாரத்தில்,தமிழ்பண்பாட்டில் ஊறிய நமக்கு இதுதவறு என்பதற்கு அர்த்தம் இல்லை.

எனவே தந்தையார் சிகப்பிரகாசத்தார் தாக்கியதில் தவறில்லை என்பதே எமது வாதமாகும்.

இந்த வழக்குப்பகுதிக்காக ஒரு சமூகவியலாளரிடமும் ஒரு உளவியலாளரிடமும் பெறப்பட்ட கருத்துக்கள் அடுத்த பக்கங்களில் தொடர்கின்றன........................................................



படிப்பகம்

www.padippakam.com

வழக்காளி தமிழ்ச்செல்வன் தகப்பனார் சிகப்பிரகாசத்தாரால் தாக்கப்பட்டதற்கான காரணங்களை வழக்காளியிடமும், எதிரியான சிகப்பிரகாசத்தாரிடமும் கேட்கப்பட்டது.

தந்தையார் **சிகப்பிரகாசம்:** பெற்றோரின் சொற்கேட்பதில்லை.தனது முடிவுகளின்படியும்,தனது விருப்பங்களின்படியும் நடக்கிறான்.இது தண்டிக்கத்தக்கதாகும்

மகன் **தமிழ்ச்செல்வன்:** எனது வாழ்வில் அத்தனை பகுதிகளிலும், எனது விருப்பங்களிலும் எனதுசுயமுடிவின்படி வாழ்வதற்கு எனக்கு உரிமையும் தகுதியும் உண்டு.
ஆனால் அதற்கு எதிராக எனது தந்தை எல்லாவிடையங்களிலும் தலையிடுகின்றார். இது ஒரு அத்துமீறும் நடவடிக்கையாகும்.

வாசகர்களே!

மகனின்வாழ்வில் பெற்றார் தலையிடலாமா? தந்தையார் தலையீடுசெய்தது தவறா? அல்லது பெற்றோரின் சொற்கேட்டு நடவாதது தமிழ்ச்செல்வனின் தவறா?

உங்கள் கருத்துக்களை சுருக்கமாக எழுதி 20.03.96ற்கு முன்னர் காகத்தின் முகவரிக்கு அனுப்புங்கள். தங்கள் வயது, முகவரி என்பனவற்றை குறிப்பிடமறக்கவேண்டாம்.

காகம்

உளவியலாளர் திரு. கதிர்காமநாதன் :-

இந்த வழக்கில் சம்பந்தப்படும் தந்தாயானவர் ஒரு சாதாரண தந்தையாக இல்லை என்பது எனது கருத்தாகும்.
ஒரு வளர்நிலை எய்திவரும் இப்பருவவயதினரை உடல்ரீதியாக தாக்குதல் என்பது இன்றைய காலகட்டத்துக்கு ஒவ்வாத ஒன்றாகும்.
இந்த தந்தையானவர் பிரச்சனைகளுடன் வாழும் ஒருவராக இருக்கவேண்டும். இவ்வகையான அவரது குழப்பநிலையில் வாழ்ந்துவரும் இவர்; மகனுக்கும் தனக்குமான முரண்பாட்டில் தனது எண்ணங்களை அல்லது கருத்துக்களை தனது பிள்ளைக்கு எடுத்து விளக்க முடியாதவராக இருக்கின்றார்.எப்போது ஒருவர் தனது மொழிமூலமான தொடர்புகளில் இயலாதவராகப் போகின்றாரோ அப்போதே அவர் தனது உடல்மூலமான கதைத்தலுக்கு வருகின்றார்.
இதையே வன்முறை என்கின்றோம்.
பெற்றோர் ஒருவர் தமது பிள்ளைகளுடன் மொழிமூலமான தொடர்பை கொண்டிருப்பார்களானால் இத்தகைய விபரீதங்கள் ஏற்பட வாய்ப்பிருக்காது.
பிள்ளையிடம் குற்றமெனக்காணப்பட்ட விடையத்தை பிள்ளையிடம் எடுத்துவிளக்கும்போது அப்பிள்ளை அதனை குற்றமாக கருதுமானால் அதன்பலாபலனகளையும் விளங்கிக்கொண்டு திருந்திவிடும்.
இங்ஙனம் மொழிவழி ஊடகத்தைவிடுத்து உடல்ரீதியாக பிள்ளை தாக்கப்படுமானால் பிள்ளை விரக்திநிலைக்குத்தள்ளப்பட்டுவிடும். இந்த விரக்தியின் பின்விளைவாக தமது பாடசாலைக்கருமங்களிலும், பிறவற்றிலும் ஆழ்ந்து ஈடுபடும் தன்மையை பிள்ளை



படிப்பகம்

www.padippakam.com

இழந்துவிடும்.

தாம் பெற்றோரால் தாக்கப்பட்டோம் என்றவிளக்கவீனமற்ற தன்மையால் ஏற்படும் மன அதிர்ச்சியினால் பெற்றோர்தவிர்ந்த ஏனைய பிறச்சூழல்களில் தமது கோபத்தை தீர்த்துக்கொள்ள அதே வன்முறையை நாடுவர்.அதாவது பொருட்களை உடைத்தோ அன்றி அதுபோன்ற நடவடிக்கைகளால் தமது கோபத்தை வெளிக்காட்டிக்கொள்வர்.

அதுமட்டுமன்றி குழந்தைப்பருவத்திலிருந்து பருவமடையும் வயதெல்லைக்குட்பட்ட பருவத்தினரிடையே இத்தகைய வன்முறைச்சம்பவங்களை புரிவதானது தாம் பெற்றோர் என்ற ஸ்தானத்தை சரிவரப்புரியாதவர்களாகும்.உடல்,மன,ரீதியில் மாற்றங்கள் பெரிதும் ஏற்படும் இப்பருவத்தில் இவர்களை கருத்துக்களால் வெல்லக்கூடிய சாத்தியப்பாடுகள் நிறையவே உண்டு.

அதுவும் புலம்பெயர் நாடுகளில் பிறிதொரு சூழலில் வாழும் தமிழற்றசூழலில் இத்தகைய வன்முறைத்தொடர்புகளால் பிள்ளைகளை அணுகுவோமானால் பிள்ளைகள் எதிர்காலத்தில் தமக்குத் தாமே "பெரியபாத்திரத்தை" உருவாக்கிக்கொண்டு; தமிழ்ச்சூழலோடு இன்னும் வாழ்ந்துவரும் தமது பெற்றோர்களுடனான இடைவெளியை அதிகரித்துக்கொள்வர். இது இருசாராருக்கும் நல்லதல்ல.

---

## பிள்ளைகளை– பெற்றோர் தண்டிக்கலாமா?

### ......................விதிமுறைகள் என்ன சொல்கின்றன!

திரு.செ. வே. கமலநாதன்

பெற்றோர் பிள்ளைகளுக்கு அடிக்கலாமா? அடிக்கலாகாதா? எனப் பொதுவாக புலம்பெயர்ந்த பெற்றார்கள் கலந்துரையாடுவது வழக்கம்."இங்கு பிள்ளைகளை அடிக்கக்கூடாது தெரியுமோ?" எனக்கேள்வி எழும் போதுமறைபொருளாக எங்களூரிலானால் விரும்பியபடி வெளுத்துவாங்கிவிடுவோம் என்றகருத்து வெளிப்படுவது இயல்பு.நான்குசுவர்களுக்குள் நடைபெறுவதனாலும்,தாக்குதலுக்கு எதிரானமுறையீடு செய்யப்படாததாலும் சட்டத்தில் ஏற்பாடுகள் இல்லை என்ற முடிவுக்கு வருதலாகாது.

மேற்சொல்லப்பட்டவை ஒருபுறமிருக்க இந்நாட்டில் பெற்றோர்கள் பிள்ளைகளை அடிப்பது தண்டனைக்குரிய குற்றம் என முடிவுசெய்ய தண்டனைச்சட்டத்தில்(STRAFFE LOVEN) வன்முறை சம்பந்தமாக உள்ள ஏற்பாடுகளில்,§ 213 நீங்கலாக, ஏனையவை வன்முறை (VOLD) சம்பந்தமான பிரிவுகளான § 244 (சாதாரண வன்முறை) § 245,§246 (கடுமையான வன்முறை) ஆகிய சட்டஏற்பாடுகள் குறிப்பாக பெற்றோர் சம்பந்தப்பட்டவையல்ல. இவை பொதுவான வன்முறைத்தாக்கல் சம்பந்தமானவையே.. இவ்வேறுபாடுகளுடன் சமூகஉதவிச்சட்ட ஏற்பாடுகள்(BISTANDSLOV) பெற்றார் பாதுகாவலுரிமைச் சட்டம் (FORÆLDRE MYNDIGHEDSLOV)ஆகியன சேர்த்துப் பொருள் விளக்கப்படும்போதுதான் இந்தநாட்டில் பிள்ளைகளின் நலன் பாதுகாக்கப்படுதலில் கூடியகவனம் செலுத்தப்படுகின்றது அல்லது நடைமுறைப்படுத்தப்படுகின்றது எனலாம்.

மேற்கூறப்பட்ட சட்டவேற்பாடுகளை விரிவாகப்பார்ப்பதற்கு முன்பு சுருக்கமாக இந்நாட்டின் பழைய சட்டவேற்பாடுகளில் பெற்றோர்களுக்கு பிள்ளைகளைத் தண்டிப்பதில் உரிமையளித்த (REVSELSERET) ஏற்பாடுகள் இருந்தமையையும் அது படிப்படியாக அகற்றப்பட்டமை அல்லது செயலிழக்கப்பட்டமை பற்றி ஓரளவு பார்ப்போம். ஐந்தாவது கிறிஸ்தியன் – 4(1683) காலத்தில் நடைமுறையில் இருந்த "வீட்டுத்தலைவன் மனைவியையும் பிள்ளைகளையும் ஒழுங்கு செய்வதற்காக அடிக்கலாமென்ற" எழுதாச்சட்டமரபு 1866ல்



படிப்பகம்

www.padippakam.com

வழக்கொழிக்கப்பட்டது.

எமதுநாட்டில் வழக்கில் இருக்கும் "அடியாதமாடு படியாது" "அடி உதவுகிறமாதிரி அண்ணன் தம்பி உதவமாட்டார்கள்" போன்ற பழமொழிகளும் "SPARE THE ROD AND SPOIL THE CHILD" என்கின்ற ஆங்கிலப்பழமொழியும் இத்தகையதே.
மிக ஆதியிலே கௌதம ஸ்மிருதியில் சிஷ்யனை அடிக்காமலே குருவானவர் பாடம் சொல்லித்தரவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.மனுஸ்மிருதியில் குருவானவர் சிஷ்யனை அடிக்கும் நிர்ப்பந்தம் ஏற்படுமிடத்து சின்னதாக ஒருமெல்லிய கயிறு,அல்லது மூங்கில் சிம்பால் தட்டலாம் எனவும்,சவுக்கு,புளியங்கொம்பு போன்றவை பாவித்தலாகாது எனவும்,முதுகில் மட்டுமே தட்டலாமெனவும் வேறெங்கும் எக்காரணம் கொண்டும் அடித்தலாகாது எனவும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் குரு ஒருவர் மாணவனை காலின்கீழன்றி வேறிடத்தில் அடிக்கக்கூடாது என்பதும் பிற்காலங்களில் நிலவிவந்ததை நாம் அறிந்துள்ளோம்.

இச்சட்டவிதிகள் அமைக்கப்பட்ட காலத்தின்பின் ஒவ்வொருவரும் அவரவர் குலத்தொழிலை புரிந்துவந்தமையால் தந்தையரே குருவாக இருந்து கலைகளைப் பயிற்றியமையினால் மேற்சொல்லப்பட்ட விதிகள் தந்தையர்க்கும் பொருந்தும்.
பின்பு பல்வேறு அன்னியச் சட்டவாக்கங்களுக்கு உட்படுத்தப்பட்டபின் தற்போது குற்றவியல் தொடர்பாக எமதுநாட்டில் பாவனையில் இருப்பது பிரித்தானியச் சட்டக்கோவையினை (PENAL CODE) அடிப்படையாகக் கொண்ட தண்டனைச் சட்டக் கோவையும் குற்றவியல் நடைமுறையும் (CRIMINAL PROCEEDURE), தீங்கியல் சட்டமும்தான்இவற்றைப்பற்றி சுருக்கமாகத்தொகுத்துக் கூறுவதாயின் அடிப்படையில் வன்முறை சம்பந்தமான ஏற்பாடுகள் இந்தநாட்டு சட்டவாக்கங்களின்றும் பெரிதும் வேறுபட்டதல்ல.
டென்மார்க் தண்டனைச்சட்டத்தில் (STRAFFE LOV) வன்முறைத்தாக்கல் (VOLD)பற்றியதுமான ஏற்பாடுகள் பின்வருமாறு:

§ 213 இந்தச்சட்டப்பிரிவில் நபரொருவர் தனது வாழ்க்கைத்துணை அல்லது பிள்ளைகள் சம்பந்தமான கவலையீனமம் அல்லது தரக்குறைவான நடத்தை மூலம் வாழ்க்கைத்துணை அல்லது பிள்ளைகளை பாதிப்புக்குள்ளாக்கும்போது அந்தநபர் 2 வருடச்சிறைத்தண்டனை அல்லது அவ்வாறான சூழ்நிலைக்குட்படத் தண்டிக்கப்படலாம். மேற்குறிப்பிட்ட பிரிவில் பெற்றோர் சம்பந்தமாகக்கூறப்பட்டாலும் தாக்குதல் பற்றி வெளிப்படையாகக் குறிப்பிடப்படவில்லை.

§§244,245,246 ஆகியன பொதுவான வன்முறைத்தாக்கம் பற்றிய சட்டஏற்பாடுகளே.
§ 244 ல் எவரொருவர் இன்னொருவருக்கெதிராக வன்முறை அல்லது வேறெந்தமுறையிலும் உடலியல் ரீதியில் தாக்கம்செய்யும்போது அவ்வாறு தாக்கும் நபர், தண்டம் அல்லது 6 மாதம் தொடக்கம் ஒருவருடம்வரையான சிறைத்தண்டனைக்கு உட்படுத்தப்படலாம்.

§ 245 ல் உடலியல்ரீதியில் கடுமையாக அல்லது பாரிய அபாயமான முறையில் தாக்கும்போது தாக்கும் நபர் 4வருடங்கள் வரையிலான சிறைத்தண்டனைக்குட்படுத்தப் படலாம்.

§ 246 ல் § 245ல் விபரிக்கப்படும் தாக்கத்தின் விளைவு மிகக்கூடியதாகவும் பாரதூரமான பின்விளைவுகளையும் அளிக்குமிடத்து சிறைத்தண்டனை 8 வருடங்கள்வரை அதிகரிக்கப்படலாம்.

இவை பொதுவான தாக்குதலுக்குரிய சட்டஏற்பாடுகா யினும் பெற்றோர் 18 வயதுக்கு குறைந்த பிள்ளைகளைத் தாக்கும்போது. பிள்ளைகள் சம்பந்தமான அரச அலுவலருக்கு அறிவிக்கப்படும் பட்சத்தில் தாக்குதலின் அளவிற்கும் பாரதூரத்திற்கும் அமைய குற்றம் சாட்டப்பட்டு நிரூபிக்கப்படும்போது தண்டனைக்குட்படுத் தப்படலாம்.

ஆனால் இந்நாட்டுச் சட்டவாக்கங்களில் பிள்ளைகளின் நலன் சம்பந்தமாக காலத்திற்குக் காலம் மாற்றம் ஏற்படுத்தப்படும்போது,பிள்ளைகள் நலன் சம்பந்தமாக தொழில்புரியும் வைத்தியர்கள்,ஆசிரியர்கள்,சுகாதாரத்தாதி யர்கள்,சமூகஆலோசகர்கள்,உளவியலாளர்கள், குழந்தைப் பராமரிப்பவர்கள் ஆகியோரும் மற்றும் பிள்ளைகளின்நலனில் அக்கறையுள்ள பெற்றோர் சங்கங்கள், மற்றும் பிற அமைப்புக்கள் ஆகிய அனைவரின் பங்களிப்பு கருத்துரீதியில் வழங்கப்படுவது வழக்கம்.

1683 ஆம் ஆண்டுச் சட்டமான அடிப்பதற்குரிய உரிமை (REVSELSESRET) வழக்கொழிக்கப்பட்டபோதும் நடைமுறையில் ஓரளவு இவ்வுரிமை "இலைமறைகாய்" போல பெற்றோர்களுக்கு உரியதாய் இருந்தே வந்திருக்கிறது. சட்டத்தில் எந்த ஏற்பாடுகள் இருப்பினும் குடும்பம் எனும் கட்டுக்கோப்பில் வீட்டுக்குள் நிகழும் சட்டமீறல்கள் குடும்ப ஒழுங்கு,கௌரவம் என்ற போர்வையில் வெளிவராதிருப்பது எந்தநாட்டிலும் இயல்பானதே.அதற்கு டென்மார்க்கும் விதிவிலக்கானதல்ல. ஆனால் அடிப்பதற்குரிய உரிமையினைக் கட்டுப்படுத்துவதற்காக 1979–1982 வரையான



படிப்பகம்

www.padippakam.com

காலகட்டத்தில் விவாதங்களும் ஆய்வுகளும் பிள்ளைகள் சம்பந்தமான விசேடகுழு நிறுவப்பட்டும் நீதியமைச்சினால் ஒரு வேலைத்திட்டக் குழுவும் அமைக்கப்பட்டது.

1984ல் JYLLANDSPOSTEN என்ற பத்திரிகையினால் எடுக்கப்பட்ட ஒரு புள்ளிவிபரக் கருத்தாய்வில் 56% மான இந்தநாட்டின் வயதுவந்தோர்பெற்றோர் தமது பிள்ளைகளை அடித்துவளர்க்க உரிமையளிக்கப்படவேண்டும் எனக்கருத்துத் தெரிவித்தனர்.18 வீதமானோர் சட்டமூலமாக பெற்றோர் அடித்தல் தடுக்கப்படல் வேண்டுமென கருத்துத்தெரிவித்திருந்தனர்.

இவ்வாறான கருத்துக்களின் பின்......

1985. ஆனிமாதம் 6ம்திகதி பெற்றோர் பாதுகாவலுரிமைச் சட்டத்தில் இவ்வுரிமையை கட்டுப்படுத்தும் மாற்றமொன்று திருத்தமாக கொண்டுவரப்பட்டது.
பெற்றோர் பாதுகாவலுரிமைச்சட்டம் – § 7 பிரிவின் 2. உட்பிரிவின்படி பெற்றோர் பாதுகாவலுரிமை பெறும் நபர் பிள்ளையை உடலியல் வன்முறை அல்லது சேதத்திலிருந்து அல்லது வேறுவிதமாக ஊனப்படுத்தும் செயற்பாடுகளிலிருந்து பாதுகாக்கக் கடமைப்பட்டவராவார் என்ற ஏற்பாடு சேர்க்கப்பட்டது.

இவ்வேற்பாட்டினால் மற்றவர்களிடமிருந்து பிள்ளையை பாதுகாப்பதுடன் மட்டுமல்லாது பெற்றோரே தாக்கும்போதும் இச்சட்டஏற்பாடு அவர்களுக்கு எதிராகவும் பிரயோகிக்கப்பட ஏற்புடையதாகின்றது.ஆனால் நடைமுறையில் பெற்றோருக்கு எதிராக பிள்ளைகள் முறையீடு செய்வது மிகவும் அரிதாக இருக்கும்.அவ்வாறு குற்றம் சாட்டப்பட்டு தண்டனைச் சட்டவேற்பாடுகளுக்கமையபெற்றோர் குற்றம்சாட்டப்படும்போது அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட வன்முறை தண்டனைக்குரியதா? தண்டனையிலிருந்து விடுவிக்கப்படலாமா? என்பதனை தாக்குதலின் பாரதூரத் திற்கமைய அதைவிசாரித்து தீர்ப்பு வழங்கும் நீதிபதிகள் தீர்மானிப்பது வழக்கம். இவ்வாறு நீதிபதிகள் தீர்ப்பினை வழங்கும் சுதந்திரத்தின்மூலம் பெற்றோர் தண்டிப்பது குற்றமா? அல்லது பெற்றோருக்கு வளர்ப்பில் தண்டிப்பதற்குரிய உரிமையுண்டு என்ற பழையசட்டஉரிமை மறைமுகமாக ஏற்கப்படுகின்றதா? என்பதை விசாரணைமுடிவில் அறியக் கூடியதாக இருக்கும். தீர்ப்பு வழங்குவதில், தாக்குதலின் அளவை நிர்ணயிப்பதில் நீதிபதிகளுக்கிடையே கருத்துவேறுபாடும் நடைமுறையில் இருப்பதுண்டு.

இவ்வாறான முடிவுகளில் தண்டனைச்சட்டத்தில் § 244, § 245 ம் பெற்றோர்பாதுகாவற்சட்டத்தின் § 7 உபபிரிவு 2 ம் சேர்ந்தே கருத்திற்கொள்ளப்படுவதுடன் பிள்ளையின் வயதும் தாக்குதலின் அளவும் நன்கு ஆராயப்பட்டே முடிவுகள் நீதிபதிகளினால் எடுக்கப்படும்.

இவற்றைவிட சமூகஉதவிச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளான § 20,21 இற்கமைய 18 வயதுக்குட்பட்டபிள்ளைகள் சம்பந்தமாக பெற்றோர் அல்லது வளர்ப்புக்கு பொறுப்பான எவரும் கவலையீனம் அல்லது ஊறுவிளைவிக்கும் செயற்பாடுகள் விளைவிக்கின்றார்கள் எனத்தெரியுமிடத்து அதனை அறிவோர் நகராட்சி நிர்வாகக் குழுவிற்கு அறிவித்தல்வேண்டும்....என்பது § 20 பிரிவிற்குரிய பொதுவிதியாகும்.

§ 21 பிரிவு உட்பிரிவு 3 ற்கமைய இவ்வாறு § 20 ம் பிரிவின் ஏற்பாட்டிற்கமைய அறிவிக்கத்தவறுபவர் தண்டனைக்குரியவராவார்.
இச்சட்டவேற்பாடுகளுக்கு அமையவே பிள்ளைகளோடு வேலைசெய்யும் உத்தியோகத்தர்கள் அனைவரும் பிள்ளைகள் தாக்கப்படுகின்றார்கள் அல்லது பிள்ளைகளின் சேமமும் நலனும் அபாயத்திற்குள்ளாக்கப்படுகின்றது என அறியுமிடத்து சமூக ஆலோசகருக்கு அல்லது சமூகநிர்வாகத்திற்கு அறிவிக்கும் கடப்பாடுடையவராகின்றனர்.
இவ்வாறு அறிவித்தல் பெறுமிடத்து § 32 ற்கமைய நன்கு பரிசோதித்து அவசியமேற்படின் வைத்தியர்கள் உளவியலாளர்களால் நன்கு பரிசோதனை செய்யப்பட்டு தேவையான பரிகாரங்களை சமூகஆலோசகர் மேற்கொள்வார்.இவ்வாறான சந்தர்ப்பங்களில் பெற்றோர்கள் குற்றவியல்ரீதியில் தண்டிக்கப்படாவிடினும் தாக்குதல் பாரதூரமானதாகவும், அவ்வாறு தொடர்ந்து இருப்பின் அது பிள்ளையின் நலனையும் ,எதிர்காலத்தையும் பாதிக்குமென நன்குஆராய்ந்து முடிவு எடுக்குமிடத்து பெற்றோரின் சம்மதத்தினுடனோ அல்லது இன்றியோ பிள்ளைகள் பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்டு வேறு பாதுகாவற்குடும்பங்களிடம் கையளிக்கப்படலாம். இவற்றைவிட ஒருவர் தனது பிள்ளையை தொடர்ந்து தாக்குதலுக்கு உட்படுத்துவதானது அவரது வாழ்க்கைத்துணை விவாகரத்துக் கோருவதற்குரிய காரணங்களுள் ஒன்றாக அமையலாம்.

இறுதியாக பிள்ளைகள் 15 வயதாகும்போது வளர்ந்தோராகக் கணிக்கப்பட 3 வருடங்களிருப்பினும் சுயமாக முடிவுசெய்யும் பல்வேறு உரிமைகளையும் பெறுகின்றார்கள்.பாலியல்சுதந்திரம், தொழில்செய்தல், ஒப்பந்தங்களில் ஈடுபடல் பணத்தைக்கையாளல் தாம்செய்யும் குற்றங்களிற்கு தண்டனைக்குட்படுத்தப்படல் ....இவ்வாறு பலவிடையங்களில் மாறுபாடு



படிப்பகம்

ஏற்படுகின்றது. பிள்ளைகளை பெற்றோரிடமிருந்து பிரிக்கும் ஏற்பாட்டில் 15 வயதான பிள்ளைகளின் சம்மதமும் பெற்றோரின் சம்மதத்துடன் பெறப்படுகின்றது. விவாகரத்து வழக்குகளிலும் யாருடன் கூடவசிப்பது என்பதை முடிவெடுப்பதில் பங்களிக்கும் உரிமையும் 15 வயதிற்கு மேற்ப்பட்டபிள்ளைகளுக்கு உண்டு.

இந்தநாட்டுச் சட்டஏற்பாடுகள் பிள்ளைகளின் நலனையிட்டு அவதானமாக அமைக்கப்பட்டிருப்பினும் புலம்பெயர்ந்த பெற்றோர்களும் பிள்ளைகளும் இன்னொரு மாறுபட்ட சமூகத்தில் வாழும்போது இருபான்மையின ருக்கும் ஏற்படும் பிரச்சனைகள்,சூழ்நிலைகள், கஸ்டங்களை மனதிற்கொண்டு புரிந்துணர்வுடன் பரஸ்பர கலந்துரையாடல்களின் மூலம் எவ்வளவோ எதிர்மறையான விளைவுகளை தவிர்த்துக் கொள்ளலாம். சட்டத்தினால் ஏற்படுத்தப்படும் பரிகாரங்கள்;வாழையடி வாழையாகப்பேணப்படும் கலாச்சாரப்பாரம்பரியங்களையும் நல்வாழ்வினையும் பேணிக்கொள்ள உதவுமா? என்ப தனை இருதரப்பினரும் மனதிற்கொள்ளுதல் அவசியமாகும். முற்றும்..............................

## முடிவிலிவினாடிகள்

..................................."ஒரு இளையவனின் அனுபவம்"

..................................................................உதயகுமார். சிவநாதன்

நாங்கள் நடந்துகொண்டிருந்தோம். நானும், எனது அப்பாவும்,மூன்று அல்லது நான்கு வளர்ந்த ஆட்களும் நடந்துகொண்டிருந்தோம்.


நான் எனது தந்தையின் சின்னவிரலை பிடித்திருந்தேன். அந்தப் பெரிய ஆட்கள் எடுத்துவைத்து நடக்கும் பெரிய அடிகளுக்கு ஈடுகொடுத்து நடக்க எனக்கு சிரமமாக இருந்தது.

எரிச்சலுடன் எனது அரைக்காற்சட்டையை மேலிழுத்து விட்டுக்கொண்டேன். அது சற்றுத்தளர் வாகவிருந்தது. நான் மேலே அண்ணார்ந்து பக்கத்தில்வந்துகொண்டிருந்த பெரியவர்களைப் பார்த்துக்கொண்டேன்.

வீதியோரங்களில் தென்னைகள் வானைத்தொடுமளவிற்கு உயர்ந்து பெருமையுடன் நின்றுகொண்டிருந்தன.

வானத்தில் எரிந்துகொண்டிருந்த சூரியன் எல்லாவற்றையும் தனது அதிகாரத்திற்குட்படுத்தியிரு ந்தான்.

அங்கு நெருங்கி,அடர்ந்து வளர்ந்திருந்த மரங்கள்,தென்னைமரங்களின் நிழலில் இளைப்பாறிக் கொண்டிருந்தன.தென்னைமரங்களை எனக்கு மிகவும் பிடிக்கும். அவற்றின் பழங்கள்தான்




### தென் ஆபிரிக்கா


➤ தென் ஆபிரிக்காவில் பெரும்பான்மை கறுப்பு இனத்தவர்கள் சிறுபான்மை வெள்ளையருடன் இணைந்து ஆட்சி அமைத்தபோதிலும் இன ஒடுக்குமறை ஒழியவில்லை. வெள்ளையரின் பாடசாலைகளில் கறுப்பு பிள்ளைகளுக்கு அனுமதி மறுக்கப்படுகின்றது. அண்மையில் நீதிமன்ற தீர்ப்பு ஒன்றின் அடிப்படையில் ஒரு பாடசாலையில் 16கறுப்பின பிள்ளைகள் அனுமதிக்கப் பட்டபோது வெள்ளையின பிள்ளைகள் 600பேரில் மொத்தம் 30பேர் மட்டும் பாடசாலைக்கு சமூகமளித்தனர்.

➤ தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவுக்கு சர்வேதேச சமானத்துக்கான இந்திரா காந்தி விருது வழங்கப்பட்டுள்ளது.

தகவல்: ரவி

www.padippakam.com

தேங்காய்கள். அவற்றின் பழச்சாற்றின்சுவை இனிமையானது.
பிரம்மாவின் படைப்பின் அதிசயத்தை அங்கே கண்டுகொள்ளலாம். நாங்கள் சென்றுகொண்டிருந்த பாதை சடுதியாகத்திரும்பி 30 மீற்றர்தூரத்திற்கு நீண்டிருந்தது. அத்துடன்........
திடீரென்று அங்கே பலகாகங்கள் வானத்தில் எழுந்து பறப்பதைக்கண்டேன். அவை பயத்தினால் கத்திக்கரைந்தன. காகங்கள் பறந்து பார்வைக்கு மறைந்தபோது ஒரு பெரிய ஒலியை நாம் கேட்கக்கூடியதாக இருந்தது. அந்த ஒலி....
எல்லாஆன்மாக்களையும் பயப்படுத்தி விரட்டும் ஒலி.காலம் கடந்துவிட்டது.ஆனால்........ ஒரு பெரிய கறுப்பு "டாங்கி" ஒன்று பெரிய அகன்றதோற்றத்துடன், வழியின் பக்கங்களிலுள்ள சிறிய மரங்களையெல்லாம் பக்கத்திற்கு தள்ளியவாறு, எங்களை பயமுறுத்தியவாறு வந்தது. இராணுவத்தினர் எங்கள்முன்னால் வந்துநிறைந்தார்கள். எனது தந்தை வியர்வையில் நனைவதைக் கண்டேன். வியர்வை வழிந்து நெற்றிச்சுருக்கங்களிடையே ஓடியது. பயத்தால் எனது அப்பாவின் கைகள் நடுங்குவதை என்னால் உணரமுடிந்தது.நான் எனது அப்பாவை அப்படி ஒருபோதும் கண்டதில்லை. அவர் அப்படியே சடமாக நின்றுகொண்டிருந்தார்ஒருகணம் எங்களுடன் வந்த ஆட்களில் ஒருவர் எங்களிலிருந்து விலகுவதைக் கண்டேன். அவன் வியர்வையில் குளித்திருந்தான். அவனது பார்வை குனிந்திருந்தது. அதேநேரம் பின்னாலும் ஒருதரம் பார்த்துக்கொண்டான்
"அவன் .....அவன் .....ஓடுகின்றான் அப்பா"
எனது அப்பா கோபத்துடனும் பயத்துடனும் உரத்துக்கத்தினார். "வேண்டாம். நீ அப்படிச்செய் யாதே......சசி!"
"சசி ! நான் சொல்வதைக்கேள். அப்படிச்செய்யாதே.ஓட வேண்டாம். ஓட வேண்டாம்." தொடர்ச்சி 26ம் பக்...






படிப்பகம்

www.padippakam.com

**H.C.Andersenகதை**

தமிழில்........................ விழி



# கடற்கன்னி

H.C.Andersen அவர்களின் கதைகளில் இந்தக் 'கடற்கன்னி' என்கின்ற கதை மிகவும் பிரபல்யம் வாய்ந்த ஒன்றாகும். இக்கதை மிகவும் நீண்டதொரு கதை என்பதனால் 96 தை இதழிலிருந்து பாகம் பாகமாக காகத்தில் வெளிவரும்.
இக்கதையில் வரும் கதாநாயகியின் உருவச்சிலை டென்மார்க்கின் உல்லாசப்பிரயாணிகளைக் கவரும் வரலாற்றுச் சின்னமாக கொப்பனேகனில் அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

3

அடுத்தவருடம் வந்தது.இப்போது நாலாவது இளவரசியின் முறையாகும். அவள் மிகவும் துணிந்தவளல்ல. அதனால் அந்த ஆழ்ந்த கடலின் நடுப்பகுதியில் வெளியுலகைப்பார்ப்பத ற்காக மேலெழுந்தாள்.
அங்கிருந்து பார்த்தபோது அவ்விடத்தைச் சுற்றி தொலைவில் ஆங்காங்கு பல மண்மேடுகள் காணப்பட்டன. மேலே வானம் அழகாக கண் ணாடியால் செய்யப்பட்ட ஒரு கடிகாரம்போலத் தென்பட்டது. அந்த அழகிய காட்சியையே அவள் தனது மற்றைய சகோதரிகளுக்கு விபரித்தாள். பலகப்பல்கள் போவதனை அவள் கண்டாள். ஆனால் அவை கடற்பறவைகள் போன்ற தோற்றத்துடன் மிக நீண்ட தூரத்திலேயே போய்க்கொண்டிருந்தன." டொல்பின்கள் சிரிப்பூட்டக்கூடிய வகையில் குத்துக்கரணம்



படிப்பகம்

www.padippakam.com

அடித்தன. திமிங்கலங்கள் தங்களது நாசித்துவாரத்தினூடாக தண்ணீரை மேலே வீசியடித்தன.இந்தக் காட்சியை பார்க்கும்போது அந்தஇடத்தைச்சுற்றி நூற்றுக்கணக்கான நீரூற்றுகளிலிருந்து தண்ணீர் வெளியே பாய்ந்து வருவதைப்போன்றதோற்றத்தைக் கொடுத்தது.

இப்பொழுது அந்த ஐந்தாவது இளவரசியின் முறை வந்தது. அது ஒரு வெண்பனிக்காலம். அக்காலத்திலேயே அவளது பிறந்தநாளும் வரும். அதனால் அவளது மற்றைய சகோதரிகள் எவரும் காணாத பலகாட்சிகளை அவள் முதன்முறையாகக் கண்டாள். கடல் பச்சைநிற மாகக் காட்சிஅளித்தது. அவ்விடத்தைச் சுற்றி பெரிய பனிமலைகள் நீந்திச்சென்றன.ஒவ்வொன் றும் பார்ப்பதற்கு முத்துக்கள்போலக் காணப்பட்டன. ஆனால் அவை மனிதர்களால் கட்டப்பட்ட தேவாலயக் கோபுரங்களைவிட பெரிதாக இருந்தன. அவையாவும் வினோதமான வடிவமைப்புக்களுடன் வைரத்தைப்போல ஒளிவீசின. அவ்வாறு நீந்திச்சென்ற பனிமலைகளில் ஒன்றில் காற்றை தனது நீண்டதலைமுடியுடன் விளையாட விட்டபடி அவள் அப்படியே அமர்ந்திருந்தாள். கப்பல்கள் அந்தப்பனிமலையைச்சந்தித்தபோது எங்கே மோதிவிடுவோமோ? என்ற பயத்துடன் தாண்டிச்சென்றன.

ஆனால் மாலையானதும் வானம் மழைமுகில்களால் நிறைந்தது. மின்னல் மின்னி இடிஇடித்தது. கறுத்திருந்த கடலின் அலைகள், பனிமலைகளை உயரத்தூக்கின. உயர்ந்த பனிமலைகள் மின்னலின் கடுமையான ஒளிவீச்சால் மின்னின. கப்பல்கள் யாவும் கப்பற்பாயை இறக்கிவிட்டு தரித்துநின்றன. அங்கே ஒரு பயமும் ,பயங்கரமும் நிலவியது.ஆனால் அவளோ அந்த நீந்திக்கொண்டிருந்த பனிமலையில் அமைதியு டன் அமர்ந்தவாறு;குறுக்கும் நெடுக்குமாக வீசிய மின்னலின் நீலநிற ஒளியையே கடலினுள் உற்றுப்பார்த்தவாறு இருந்தாள்.

அந்தச் சகோதரிகள் ஒவ்வொருவரும் முதன்முறை நீர்ப்பரப்பின்மேலே வந்தபோது தாங்கள் பார்த்த புதிய அழகிய விடையங்கள்பற்றி எல்லையற்ற மகிழ்ச்சி கொண்டனர். ஆனால் இப்போது அந்த ஆறு இளவரசிகளில் ஐந்து பேர் வளர்ந்த பெண்களாகிவிட்டனர்.அந்த ஐந்து பேருக்கும் தாங்கள் விரும்பும் இடங்களுக்கு போகவும், தாமதித்து வீடுதிரும்பவும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அனுமதி வழங்கப்பட்ட ஒருமாதத்திற்குள்ளாகவே தாங்கள் வசிக்கும் இடம்தான் அனைத்தையும்விட அழகானதென்று ஒவ்வொரு இளவரசியும் சொல்லிக்கொண்டார்கள்

பலமாலைப்பொழுதுகளில் அந்த ஐந்து சகோதரிகளும் ஒருவருடன் ஒருவர் கைகோர்த்தவாறு வரிசையாக நீரின்மேலெழுவார்கள். இனிமையான குரல்வளமும் அவர்களுக்கு இருந்தது. மனிதர்களைவிட அவர்கள் அழகாகவும் இருந்தனர். புயல்வீசியபோதெல்லாம் கப்பல்கள் உடைந்து ஆழ்ந்துபோவதற்கு வாய்ப்பிருந்தது. அந்தநேரத்திலெல்லாம் அவர்கள் கப்பலின் முன்னால் நின்று கடலின் அடித்தளத்தின் அழகைப்பற்றிப் பாடினர். மாலுமிகளை பயமில்லாது அங்குவந்து பார்வையிடும்படி பணிவுடன் அழைத்தனர். ஆனால் இவற்றையெல்லாம் அந்தமனிதர்கள் புரிந்துகொள்ளவில்லை. அந்த அழகை அவர்கள் பார்த்து இரசிக்கவுமில்லை. மாறாக கப்பல் நீரில் அமிழந்துபோனபோது இறந்தமனிதர்களின் உடல்களே கடலரசனின் கோட்டைக்குள் வந்து சேர்ந்தன.

இவ்வாறு ஐந்து சகோதரிகளும் கைகோர்த்து கடலுக்குமேலே வந்தபோது அந்த ஆறாவது பெண் தனித்துவிடப்பட்டாள். எப்போ அவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

திரும்பிவருவார்கள் என்று அவர்களுக்காக கடலினடியில் காத்திருந்தாள்.அப்போதெல்லாம் அவளுக்கு அழுகைவந்தது. ஆனால் கடற்கன்னிக்குஅழும்போது கண்ணீர் வருவதில்லை. இதனால் அவள் மேலும் மேலும் வருந்தினாள்.

"எனக்கு எப்போது பதினைந்து வயதாகும்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

"எனக்கு பதினைந்து வயதாகும்போது நான் எப்படி உலகத்துடனும் மனிதர்களுடனும் உறவை ஏற்படுத்தி எவ்வாறு அங்கு வாழ்வது என்பதுபற்றி எனக்குத்தெரியும்" என்று மேலும் தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

அந்த நாளும் வந்தது. அந்த ஆறாவது இளவரசிக்கு பதினைந்து வயதாகியது.

"இப்போதிருந்து நீ எங்களது கையிலிருந்து நழுவிவிடப்போகின்றாய்" என்று இளவரசியின் பாட்டியான அந்த வயதான அரசி கூறினாள்.

"உனது மற்றைய சகோதரிகளை அலங்கரித்ததுபோலவே உன்னையும் அலங்கரித்துவிடுகிறேன்" என்றுகூறி, அழகிய வெள்ளைநிற மலர்களுடன்கூடிய மலர்மாலையை தலையில்வைத்து அவளை அலங்கரித்துவிட்டாள். அந்த அலங்கரிக்கப்பட்ட எல்லா மலர்களினதும் பாதிஇதழ்கள் முத்துக்களினால் ஆக்கப்பட்டிருந்தது.இளவரசியின் உயர்வைக் காட்டுவதற்காக எட்டு உயர்வகைச்சிப்பிகள் அவளின் பின்புறத்தை அலங்காரம்செய்தன.

"இது எனக்கு மிகவும் வலியைத்தருகின்றது" என்று அந்த சிறிய கடற்கன்னி கூறினாள்.

"அதிகமான அலங்காரம் தேவையெனில் நோவைப்பொறுத்துக்கொள்ளத்தான்வேண்டும்" என்று பாட்டி கூறினாள்.

இந்த அற்புதமான அலங்காரத்தினாலும், பாரமான மலர்மாலைமுடியினாலும் அவளுக்கு நடுங்கவேண்டும்போலிருந்தது. அவளது தோட்டத்திலிருக்கும் சாதாரணசிவப்புநிற மலர்களால் அவளை இதைவிட அழகுபடுத்தியிருக்கலாம். ஆனால் அங்ஙனம் செய்வதற்கு அவளுக்கு இப்போது துணிவிருக்கவில்லை. "போய்வருகின்றேன்" என்றுகூறியபடி ஒரு நீர்க்குமிழைப்போல நீருக்குள் தாவிச்சென்றாள்.

அவள் கடலின் மேற்பரப்புக்கு வந்து, தலையை மேலேதூக்கிப்பார்த்தபோது சூரியன் சற்று முன்னராகத்தான் மறைந்திருந்தான். ஆனாலும் முகில்கள் இப்போதும் ரோஜா நிறத்திலும் தங்கநிறத்திலும் மின்னிக்கொண்டிருந்தன. இளம்சிவப்பு நிறத்திலான ஆகாயவெளியின் மத்தியில் மாலைநேரத்துக்கான நட்சத்திரங்கள் துலக்கமாக பிரகாசித்துக்கொண்டிருந்தன. புத்தம்புதிய காற்று இலேசாக வீசிக்கொண்டிருந்தது. கடலும் அமைதியாக இருந்தது. அங்கே ஒரு கப்பல் மூன்று பாய்மரங்களுடன் நின்றுகொண்டிருந்தது. ஆனால் அதில் ஒருபாய் மாத்திரமே அக்கப்பலில் உயரே ஏற்றப்பட்டிருந்தது. ஆனால் அதையும் காற்று தொட்டதாகத் தெரியவில்லை. பின்னப்பட்டிருந்த கயிறுகளைச் சுற்றிலும் தடிகளிலும் மாலுமிகள் உட்கார்ந்திருந்தனர். அந்த இடம் பாட்டினாலும்,இசையினாலும் நிறைந்திருந்தது.மாலைநேரத்து இருள்கூடிய போது அங்கு பலவர்ண விளக்குகள் ஏற்றப்பட்டன.

கடற்கன்னி கப்பலின் ஜன்னலொன்றை நோக்கி நீந்தினாள். ஒவ்வொருதடவையும் நீரலைகள் அவளை மேலே உயர்த்தியபோது கண்ணாடியூடாக அவளால் உள்ளே பார்க்கமுடிந்தது. அங்கே மனிதர்கள் பலர் உட்கார்ந்திருந்தனர். ஆனால் அவர்கள் எல்லோரையும்விட அங்கிருந்த இளம் இளவரசன் பெரியகறுப்புக் கண்களுடன் [illegible] அழகாகஇருந்தான். அவனுக்கு பதினாறு வயதுக்குமேலிருக்காது. அவனுக்கு இன்று பிறந்தநாள் என்பதாலேயே அங்கு இவ்வளவு அலங்காரங்களும் செய்யப்பட்டிருந்தன.

..........................................................................தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

காகம் பத்திரிகையில் நகைச்சுவைப்பகுதி இடம்பெறுவதில்லை என்ற வாசகர்களின் அபிப்பிராயத்தை நிறைவுசெய்யுமுகமாக; இந்த இதழிலிருந்து.......

துருக்கிநாட்டைச் சேர்ந்த "கோட்ஜாநஸ்ரூதீன்" அவர்களின் உலகப் பிரசித்திபெற்ற.. 111 கதைகளை மாதாமாதம் மொழியாக்கம் செய்து மறுபிரசுரம் செய்கின்றது காகம்.

**மொழியாக்கம்:அப்பனார்**



## *அந்தப் பிழையான திசை*

*ஒருநாள் நஸ்ரூதீன் தனது கழுதையில்ஏறி உட்கார்ந்து கொண்டார்.*
*ஆனால் அவரது முகம் கழுதையின் வாலைப் பார்க்கும்படியாக பிழையானமுறையில் அமர்ந்திருந்தார்*
*"நீ கழுதையில் பிழையாக உட்கார்ந்திருக்கிறாய்" என்று அருகிலிருந்தவர்கள் கூறினர்.*
*"இல்லை! "என்று பதிலளித்தார் கோட்ஜா.*
*"நான் பிழையாக அமர்ந்திருக்கவில்லை. ஆனால் எனது கழுதைதான் பிழையான திசையில் திரும்பி நின்றுகொண்டிருக்கின்றது"*

∴∴∴

## *மிளகாய் சூப்*

*நஸ்ரூதீனின் மனைவி தனது கணவனில் அடிக்கடி கோபம் கொண்டாள்.*
*ஒருநாள் அவர் வருந்தவேண்டுமென்பதற்காக மிகக்காரமான மிளகாய் சூப் ஒன்றைத்தாயாரித்து மிகச்சூட்டுடன் அவருக்கு பரிமாறினாள். தானும் ஒருகரண்டி சூப் எடுத்துக் குடித்தாள்.*
*அதன் காரத்தாலும் சூட்டினாலும் தொண்டையில் அதிகஎரிச்சல் எடுத்தது.*
*கண்ணீர் வழிந்து கன்னத்தில் ஓடியது.*

*"நீ ஏன் அழுகிறாய்" என்று கோட்ஜா கேட்டார்.*
*"நான் எனது அம்மாவை நினைத்துக்கொண்டேன் அவளுக்கு இந்த சூப் என்றால் மிகவும் பிடிக்கும். அவள் இறப்பதற்கு முன்னர் இதனை அடிக்கடி தயாரிப்பாள்" என்று அவள் பதிலளித்தாள்.*

*நஸ்ரூதீன் தானும் மனைவியின் கவலையை உணர்ந்தவர்போல கவலையுடன் தலையாட்டிக் கொண்டார்.பின்பு ஒருகரண்டி சூப்பை எடுத்துக் குடித்தார். அவரது கண்களிலிருந்தும் கண்ணீர் வழிந்தது.*
*"நீ இப்பொழுது எதற்காக அழுகிறாய்? உன்னை எந்தக்கவலை வாட்டுகிறது?" என்று அவரது மனைவி கேட்டாள்.*
*"நானும் பரிதாபத்துக்குரிய உனது இறந்துபோன தாயை நினைத்துத்தான் அழுகிறேன். ஆனால் அதேநேரம் படுமோசமான பெண்ணாகிய நீ இன்னும் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறாயே!"*



படிப்பகம்

www.padippakam.com

21ம்பக்கத் தொடர்ச்சி..............................

என்னால் அவன்ஓடுவதைப் பார்க்கமுடிந்தது. அவனது முகம் ப்யத்தால் நிறைந்திருந்தது. அவனது நினைவுமுழுவதும் அந்த கடைசி தப்பிக்கும்வழியை தேடுவதிலேயே நிறைந்திருந்தது.
அவனது திட்டத்தை பாருங்கள்! அவனது நெற்றியில் வியர்வை வழிந்தோடியது. அவனது ஒரே யொரு நம்பிக்கை அந்த 150 மீற்றர் தொலைவிலிருந்த மறைவிடத்தை அடைவதுதான்.
நான் இராணுவத்தினரைப் பார்த்தேன். அவர்கள் அவனையே இலக்குவைத்தபடி இருந்தனர். அவர்கள் இயந்திரத்துப்பாக்கிகளோடு பயங்கரத்தோற்றத்துடன் இருந்தனர் அந்த இராணுவத்தினரில் ஒருவன் ஓடிக்கொண்டிருந்த மனிதனை வெறுப்புடன் பார்த்தான். அவனை நோக்கிய தனது இலக்கை தளர்வுபடுத்தி அவன் உரத்தகுரலில் ஏதோ கத்தினான்.எல்லோரும் அசையாது நின்றுகொண்டனர்.ஆனால் அந்த ஓடிக்கொண்டிருந்த மனிதன் திரும்பிப்பார்க்கவேயில்லை.

எனது அப்பா இப்போதும் ஒரு கல்லைப்போல நின்றார். அந்த நிறந்த நெடுஞ்சாலையில், நேரம் அப்படியே அமைதியாய் இருந்தது.

நினைவுகள் பெரிதாகவும் கொடுமையாகவும் இருந்தன. இலக்குக்குளாய் மெதுவாகத்திரும்பி ஓடிக்கொண்டிருந்த மனிதனைநோக்கித் திரும்பியது. ஆனால் அந்த மனிதன் இப்போதும் திரும்பிம்பிப்பார்க்கவில்லை. அந்த ஆமிக்காரன் கதைத்த விசித்திரமான மொழி எனக்கு இப்போது விளங்கியது.

"அப்பா ! அது ........அது......அவனைக்குறிபார்த்து விட்டது."

..........................................................முற்றும்......

வாசகர்களே! உங்களது ...............
ஈழத்து யுத்த அனுபவங்களை எழுதி அனுப்புங்கள்.
இதுபோன்ற ஆக்கங்களை தாகம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றது

தாகம்

முற்றமெல்லாம் புழுங்கல் – அதனால்
எம் நெஞ்சமெல்லாம் அம்முற்றம்.
– ஒரு தாய்

"இது ஒரு தமிழ் மாசிகை"
ஏடு இல: 3– பங்குனி– 96
வெளியீடு: ரூலி பப்ளிக்கேசன்
Baunehøjen 35
3320 Skævinge
Denmark
Tlf: 42 28 90 12
விலை: ஒரு வருடம்
( 12 இதழ்கள் )–200
டனிஸ்குரோன்கள்
வெளிநாடுகள்: 50 U$
கட்டணம் செலுத்தவேண்டிய
வங்கி:
Tuli Publikation
Den Danske Bank
Hillerød Afdeling, Slotsgade 16- 18
Postboks 255
3400 Hillerød Denmark.
A/C NO : 35 43 - 38 69 87
அல்லது
Post Giro : 94 78 65 3

ஆசிரியர்: முல்லையூரான்
படைப்பாளிகள்தொடர்பு: திரு.ரவி .Tlf: 86 40 38 05
வாசகர்கள் தொடர்பு: திரு.செல்வன் Tlf:86 64 51 98
வடிவமைப்பு: ரூலிபதிப்பகம், ரவி
அட்டைப்படம் : ஓவியர் திரு. ...

சஞ்சிகையில் இடம்பெறும் ஆக்கங்களுக்கு
படைப்பாளிகளே
முழுப்பொறுப்பாளிகளாவர்.தாகத்தின் எண்ணங்களை
படைப்பாளிகள் பிரதிபலிக்க வேண்டுமென்பதில்லை.
..........................தாகம்..........................



படிப்பகம்

www.padippakam.com

## மறந்திட்ட மனிதர்கள்!

கடையிலே சப்பாத்து
கண்ணைப்பறித்ததாம்.
காசைக்கொடுத்து
காலிலே மாட்டினால்
அது காலைக் கடித்ததாம்.
ஏன் இது?
மனிதன் தன் அளவை மறந்ததால்.

குதிரையின் நினைப்போ
தான் மனிதனைச் சுமப்பதாய்.
மனிதனின் நினைப்போ...
குதிரையை உதைப்பதாய்.
ஏன் இது?
மனிதன் தன் இருக்கையை மறந்ததால்.

பசுவினம் நினைக்குதாம்
மனிதருக்கு தான் பால்கொடுப்பதாய்
மனிதர் நினைக்கிறார்......
பசுவிடம் தாமே பாலை கறப்பதாய்.
ஏன் இது?
மனிதன் தன் மனிதத்தை மறந்ததால்
மனிதன் தன் மனிதத்தை மறந்ததால்.

..........................வேலணையூர் பொன்னண்ணா......

---

## எண்ணப்பறவைகள்



நீ போற பாதை
நானும் வருவேன்.
தென்றல் உனைத் தொடமுன்
நானுனைத்தொட்டிடுவேன்.
என்னைவிட அவசரமாக
உன்னை யாரும்
காதலித்துப் பார்த்ததில்லை.
வானத்தைவிட அகன்ற உன் இதயம்
சூரியனைவிட
சுட்டெரித்துவிடும் உனது விழிகள்.
ஒரு நிலாக்காலத்து
ஊடல்தன்னில்
வெறும் கற்பனைக்காய்
என்றும் அந்த இன்பநினைவில்
புதியபாடம் புதுமைதரும் புறச் சூழல் நாகரீகம்
நாம் நடந்தபாதை
சூரியகாந்திகள் கண்விழித்து பார்த்தன.
ஏன் இன்னும் அங்கு
சிறகடித்துப்பறந்த சிறு வண்டினங்கள்
சுதந்திரப்பூவை சுற்றி முத்தமிட்டபோது
சிற்றோடையோரம் குளிர்காயும்
அந்தப்பறவையைப்போ ல்
நாளும் இயற்கையை,இந்த உலகத்தை
எம்மைச்சுற்றிய அந்த மனிதர்களை
ஏன் இன்னும் நேசிக்கத்தொடங்கவில்லை.
வெறும் கற்பனைக்காய் நீ எழுந்து போதையில்
ஒருபுதுநடனம் தந்துவிட்டு
வெறும் மயக்கத்தில் இரவினைக்கண்டு
எனைஅழைத்து ...........

இன்றும் அந்த இன்ப நினைவுகளை
என் மனம்மீது
சுமந்துகொண்டு ........
..............................................
ஏங்கியபோது – இன்னும் அந்த
..........................
....................................
அந்த ஸ்பரிசத்தை சொந்தமாக்கி
மனநோயாளியாய்
இந்த உலகத்தை இன்னும் பரியாமல்....
சுதந்திரம் தந்த எந்தன் உள்ளம்
சிறகடித்துப்பறந்தது
அந்த எண்ணங்களுடனே....!

வேலு.ஸ்ரீதரன்



படிப்பகம்

www.padippakam.com

Til: Thevan
Dyssegården 5,2,tv
7500 Holstebro

"Postbesørget blad, (0900 KHC) " -51033

## சிறுவர்நூல்

1996 வைகாசியிலிருந்து
தமிழ்ச்சிறுவர்களுக்கான
சிறுவர் நூல் ஒன்றினை
வெளிக் கொணரத்
திட்டமிடப்படுகிறது
இதனைப்பெறவிரும்புபவர்கள்
தொலைபேசி: 42 28 90 12
....................காகம்

Afs: Tuli Publication Baunehøjen 35, 3320 Skævinge, Denmark

படிப்பகம்